# அறிவுச் சுரங்கம்

# 2024

இதழ் 05

## தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழ்
## NATIONAL READING MONTH JOURNAL

"உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே"

பொது நூலகம், மாநகரசபை, மட்டக்களப்பு
PUBLIC LIBRARY, MUNICIPAL COUNCIL, BATTICALOA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவுச் சுரங்கம்

## இதழ் - 5

தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர் - 2024

இதழாசிரியர்

செல்வி.த.சிவராணி

வெளியீடு

பொது நூலகம்

மாநகர சபை

மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சஞ்சிகை விபரம்


| | |
|---|---|
| சஞ்சிகையின் பெயர் | அறிவுச் சுரங்கம் |
| இதழ் | ஐந்தாவது |
| இதழாசிரியர் (நூலகர் பொது நூலகம்) | செல்வி.த.சிவராணி |
| வெளியீடு | பொது நூலகம்,மாநகரசபை, மட்டக்களப்பு. |
| பதிப்புரிமை | வெளியீட்டாளருக்கே |
| ஆண்டு | 2024 |
| பக்கங்கள் | 69 |
| ஆக்கங்களுக்கு | ஆக்கியோரரே பொறுப்பு . |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## மாநகர ஆணையாளரின்

## வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தில் மட்டக்களப்பு நூலக சேவையினை எண்ணிப்பார்க்கையில் கிழக்கு மாகாணத்தில் முதற்தரமான பொது நூலகம் மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் இயங்குகின்றது என்பது பெருமையாக உள்ளது. இந்நூலகத்தின் வளர்ச்சி படிப்படியாக முன்னேறி வந்து தற்போது நவீன வசதிகளுடன் கூடிய கணனி மயப்படுத்தப்பட்டதும் தன்னியக்கமானதுமான வசதிகளைக் கொண்டதாக இயங்கி வருகின்றது.

இதன் வரலாறு மிகப் பழைமையானதும், மட்டக்களப்பு பாரம்பரியங்களையும், கலை கலாசார விழுமியங்களையும் நீண்ட காலமாக முன்னெடுத்து வந்து இன்றைய நவீன தொழில்நுட்ப காலத்துடன் இணைந்துள்ளது. என்பதனை வெளிப்படையாக கூறலாம்.

மட்டக்களப்பு பொது நூலகத்தின் பயனை அனுபவித்து மேல் நிலை அடைந்தவர்கள் பலர். அவர்கள் இன்னும் இந்நூலகத்தின் பெருமையையும், தனிச் சிறப்பினையும் பேசுவார்கள்.

இன்று இளையோர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைந்து விட்டது என குறைகூறப்படுகின்றது. அதனால் தான் இந்த வாசிப்பு மாதம் அவர்களை வாசிப்பின்பால் ஈர்க்க முற்படுகின்றது.

**“உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே”** என்னும் தொனிப்பொருளில் 2024ம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதமானது கொண்டாடப்பட்டது, இந்நிலையில் மட்டக்களப்பு பொது நூலகத்தினரால் **“அறிவுச்சுரங்கம் இதழ்5”** சஞ்சிகை வெளியிடுவது பாராட்டுக்குரியது. இந்தப் பணியில் ஆக்கங்களைத் தந்து மற்றும் முன்னின்று பணியாற்றிய அனைவரையும் பாராட்டுகின்றேன். உங்கள் பணி தொடரட்டும். வாசிப்பதனூடாக வாழ்வை வளப்படுத்துவோம்.

**நா.தனஞ்ஜெயன்SLAS-1**
**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நிருவாக உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு பொதுநூலகத்தினரால் 'வாசிப்புமாதம் 2024'ற்காகவெளியிடப்படும் **"அறிவுச்சுரங்கம் இதழ்5"** சஞ்சிகைக்கு எனதுவாழ்த்துச் செய்தியைவழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

மாணவர்கள் மத்தியில் வாசிப்புதிறனை வளர்க்கவேண்டுமென்ற அடிப்படையில் மட்டுமாநகரசபையானது வருடந்தோறும் செயற்படுத்திவருகின்ற வாசிப்புமாதநிகழ்வானது உண்மையில் பாராட்டப்படவேண்டியவிடயம். அதனைசெயற்படுத்தி நடைமுறைப்படுத்தும் நூலகங்கள் இவ்வாறான சஞ்சிகைகள் வெளியிடுவதுமிகவும் பாராட்டப்படவேண்டியது.

வாசிப்பைசுவாசிப்பாககொண்டவர்கள் அறிவால்யாசிக்கப்படுகின்றனர். அவர்கள்சமுதாயத்தில் போற்றப்படுவர்களாகவும் சமூகத்தைநல்லவழியில் சுபீட்சிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மொழிதகவல்களைப் பரிமாற்றும் ஊடகமாகவுள்ளதால் எழுத்துமொழி நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கக்கூடியவகையில் அப்பணியைப் புரிகின்றது. **'தொட்டனைத் தூறும் மணற்கேணிமாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு'** என்பதற்கமையவாசகர்களுக்கு அறிவுச் சுரங்கத்தில் அகழப்படுகின்ற ஆக்கங்கள்அறிவின்,ஆழத்தைவெளிக்காட்டும். இம்முயற்சி இடைவிடாதுதொடரட்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன் அறிவுச்சுரங்கத்திற்கும் அதனுடன் தொடர்புபட்டஅனைவருக்கும் எனதுமனம் நிழறந்தவாழ்த்துக்களினையும் பாராட்டுக்களினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.கி.பிறேமகுமார்**
**நிருவாக உத்தியோகத்தர்**
**மாநகர சபை**
**மட்டக்களப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வாசகர்வட்ட தலைவரின் வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தினை(2025) முன்னிட்டு மட்டக்களப்பு நூலகத்தினால் வெளியிடப்படும் **"அறிவுச்சுரங்கம்"** சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் அகமகிழ்கிறேன்.

"நல்லதோர் மனிதனுக்கு நல்லதோர் புத்தகம் வாழ்நாள் முழுவதற்குமான நல்லதோர் பொக்கிஷமாகும்" என்றான் ஓர் பேரறிஞன். புத்தக வாசிப்பின் மூலம் வாழ்வில் சிகரத்தை தொட்ட எத்தனையோ சாதனையாளர்களை நாம் வரலாறு முழுவதும் சந்திக்கின்றோம். அவர்களை பட்டியலிட்டால் இந்த மலரே போதாது.

அனுபவங்களேமனிதனைப் பட்டை தீட்டுகின்றன. ஒரு மனிதனால் வாழ்க்கை அனுபவங்கள் அத்தனையையும் தன் வாழ்நாளில் பெறமுடியாது. அவ்வாறான அனுபவங்களைப் பதிவு செய்த பேரறிஞர்களின் புத்தகங்களைப் படிப்பதன் மூலம் மனிதன் முழுமையடைகிறான். எனவே வாசிப்பை நேசிப்போம், புத்தகங்களின் உயிர்மூச்சை சுவாசிப்போம், அதனால் வாழ்வில் வைரங்களாய்ப் பிரகாசிப்போம்.

**சோ.அருளானந்தம்**
**தலைவர்**
**வாசகர்வட்டம்**
**மட்டக்களப்பு நூலகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## நூலாசிரியரின் இதயத்திலிருந்து

பலநாட் போரின் விளைவாக ஒரு கீதை பிறந்தது. அதுபோல் 30நாள் தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகளின் பயனாக இச்சஞ்சிகை மலர்கிறது.

எழுத்து ஒரு கலையெனில் வாசிப்பு அதன் மறுகலை எழுதத் தூண்டும் எண்ணங்கள் போலவே வாசிக்கத் தூண்டும் எண்ணங்களும் எழுத்தும் வாசிப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

நான் எழுத்தாளனல்ல, தீவிர வாசகி

வகைவகையாகவும் தொகை தொகையாகவும் நூலகத்தில் தேங்கிக் கிடக்கும் நூல்களை வாசிக்கும் வாசகர்கள் அருகிவரும் சவாலானதொரு காலகட்டத்தில் நூலகராக எனது பணியை மேலெடுத்துச் செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலை.

இந்த எண்ணக்கருவில் உருவான "தேசிய வாசிப்பு மாதம்" என்கிற திட்டத்தின்கீழ் வாசிப்பை ஊக்குவித்தல் என் தலையாய கடமையாக உணர்கிறேன்.

பிற்பட்ட பாடசாலைகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து நூல்களை முதலில் அறிமுகம் செய்ய வேண்டும் என்கிற தொனிபலராலும் முன்வைக்கப்பட்டது. எனவே முப்பது நாட்களுக்கான வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக மாணவர்களையும், இளைஞர்களையும் இலக்குவைத்தேன்.

வாசிப்பென்பதுஇலத்திரனியல் மயமாகிக் கொண்டிருக்கும் ஒருகாலகட்டத்தில் நூல் வாசிப்பையும் பேணவேண்டிய தொரு நெருக்கடி நிலை. காட்சி ஊடகங்கள், வானலை ஊடகங்கள் அறிமுகமாகுமுன் மக்கள் மத்தியில் வாசிப்பே பிரதான பொழுது போக்காகவும், அறிவின் வழி மனிதனை நகர்த்திச் செல்லும் பிரதான காரணியாகவும் திகழ்ந்தது. அறிவைப் பெறவும் பகிரவும் இதுவழிகோலியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பரீட்சைப் பெறுபேறுகளை மையப்படுத்திய (Result Oriented) கல்வி முறை மாணவர் மத்தியில் வேரூன்றிப் போன ஒரு காலகட்டத்தில் நூல்வழி அறிவைவிருத்தி செய்யும் பண்புகளும் அற்றுப் போனது சோகம் தான். எனவே வாசிப்புப் பழக்கத்தை மாணவர் பக்கம் நகர்த்த வேண்டிய தேவையை ஒரு நூலகரென்கிற வகையில் என்னால் உணரமுடிகிறது.

ஏனெனில் எதிர்காலம் அவர்களது நல்ல படைப்பாளியாக வேண்டுமெனில் ஒருவர் முதலில் நல்ல வாசகனாக வேண்டும். மரபுவழி இலக்கியங்களிலிருந்து பல "இசங்களுக்கு" இலக்கியம் கால ஓட்டத்தில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டியது தேவையிலுள்ளது. என்பதை இளஞ்சந்ததி புரிந்து கொள்ளுமா?

நமக்குள் வாசிப்பு ஏற்படுத்தும் சீரிய செவ்வழிச் சிந்தனைப் பரிணாமங்களை நாம் உணர வேண்டும். வாசிப்பை ஓர கோட்பாட்டுச் சிந்தனையாக்கிச் செயற்பட வைக்க வேண்டியதை என் தலையாய கடமையாக உணர்கிறேன்.

மாற்றுச்சிந்தனைக்கு நாம் தயாரா...? எனில் வாசிப்பை நேசிப்போம்.

த.சிவராணி
நூலகர்
பொது நூலகம்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளடக்கம்


| விடயம் | பக்க எண் |
|---|---|
| ➢ ஒழுக்கம் உயர்வு தரும் | 01 |
| ➢ சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்போம் | 02 |
| ➢ வாசிப்பு உலகை வெல்வதற்கான ஆயுதம் | 03 - 04 |
| ➢ நவீன தொழினுட்ப காலத்தில் வாசிப்பு அவசியமா? | 05 – 06 |
| ➢ ( வாசிப்பு உலகை வெல்வதற்கான ஆயுதம் ) | 07 – 08 |
| ➢ முதல் பயணம் ............. | 09 – 11 |
| ➢ நெத்தியடி | 12 |
| ➢ வாசிப்பை நேசிப்போம் | 13 |
| ➢ நூலகம் செல்வோம் | 14 |
| ➢ கனவாய் விரிகின்ற இருள் குகை | 15 |
| ➢ யானை கடந்த ஆயிரம் காடுகள் | 16 |
| ➢ மலச்சிக்கல் ( உணவே மருந்து ) | 17 |
| ➢ விதியின் அறியாமை | 18 |
| ➢ வாசிப்பின் ஊற்றாய் நாம் ........... | 19 |
| ➢ புத்தகம் பற்றி கவிதை | 20 |
| ➢ வாழுகின்ற சமூகத்திலே ..... வாழ்க்கை என்றால் ( நாடகம் ) | 21 – 34 |
| ➢ சமூகத்தில் பெண்களும் சிறார்களும் அதிகம் பாதிப்படைகின்றனர் | 35 – 37 |
| ➢ அறிவைத்தேடும் நூலகம் | 38 – 39 |
| ➢ The Power of Storytelling : The Impact of Reading Fiction | 40 |
| ➢ நூலகம் ஒன்றில் நூலகரின் வகிபாகங்கள் | 41 – 43 |
| ➢ உலகை வென்றவர்கள் வாசித்தவர்களே | 44 – 46 |
| ➢ முயற்சி வீண்போகாது | 47 – 51 |
| ➢ குன்றென நிமிர்ந்து நில் | 52 |
| ➢ அன்னை ............. | 53 |
| ➢ இசைகூட இரைச்சல் ஆகும் போது பயணப்படு! | 54 |
| ➢ கற்பது கடமை | 55 – 56 |
| ➢ நூல்களால் நான் ஒளிர்கிறேன் | 57 |
| ➢ ( நூல்களால் நான் ஒளிர்கிறேன் ) | 58 |
| ➢ "வாசியுங்கள் நூல்களை சுவாசியுங்கள் | 59 |
| ➢ நீரழிவு நோயை வெல்வோமா? | 60 – 63 |
| ➢ உலகளாவிய சுற்றாடல் பாதுகாப்பும் சூழலியல் வகிபாகமும் | 64 - 69 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒழுக்கம் உயர்வு தரும்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" ஒழுக்கமே உலகில் உள்ள அனைவருக்கும் உயர்வைத் தருகிறது.அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும் என திருவள்ளுவர் கூறுகிறார். ஒழுக்க பண்புகள் என்பன சினம்,பொறாமை கொள்ளாதிருத்தல், பொய் பேசாமை,பெரியவர்களை மதித்தல்,தீய செயல்களை செய்யாமல் இருத்தல்,அன்பு மற்றும் அறவழியில் நடத்தல் போன்றவை ஆகும். திருவள்ளுவர் ஒழுக்கமுடைமை எனும் அதிகாரத்தில் பல ஒழுக்க பண்புகளை கூறியுள்ளார்."நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்" இந்த குறளில் வள்ளுவர் நல்லொழுக்கம்,வாழ்கையில் நன்மையைத்தரும். தீயொழுக்கம் ,தீராத துன்பம் தரும் என்கிறார். ஔவையாரும் "ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்" என்று ஒழுக்கத்தின் அவசியத்தைக் கூறுகின்றார்.காந்தயடிகள் ஒழுக்கத்தைப் போற்றியவர்.வள்ளுவர் முதல் வள்ளலார் வரை ஒழுக்கத்தைப் போற்றுகின்றனர்.மதங்களும் ஒழுக்கத்தை நிலைநாட்டவே தோன்றின.

காந்தியடிகளின் மூன்று குரங்கு பொம்மைகள் "தீயவை கேளாதே , தீயவை பார்க்காதே , தீயவை பேசாதே" என்னும் ஒழுக்கப்பண்புகளை நினைவுறுத்தும் , ஒழுக்கத்தால் கிடைக்கும் உயர்வு எல்லாவற்றையும் விட உயர்வானது. "ஒழுக்கத்தில் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி" திருவள்ளுவர் இந்தக் குறளில் ஒழுக்கத்தால் மேன்மை கிடைக்குமென்றும் ,ஒழுக்கம் தவறுவதால் பழி என்றும் வலியுறுத்துகின்றார்.வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்வதே நாம் தலை சிறந்து வாழ வழிவகுக்கும்.நம் முன்னோர் அறநெறிகள் , அனுபவங்கள் மூலம் எமக்கு ஒழுக்க பண்பை உணர்த்திச் சென்றுள்ளனர். நீதி நூல்களாக எழுதி வைத்துள்ளனர்.மாணவர்களாகிய நாம் நேர்மையுடனும் , சமூகப்பொறுப்புடனும் வளர வேண்டும். எனவே கல்வி கற்கும் மாணவராயிருந்து நாளைய தலைவராகும் பொறுப்புடைய நாம் ஒழுக்கத்தை எமது வாழ்வில் வழக்கப்படுத்தி உயர்வாக வாழ்ந்து வெற்றிபெறுவோம்.

ஒழுக்கம் உடல் நலத்தையும் , மன நலத்தையும் பெற்றுத்தர வல்லது. எப்போதும் மேன்மையைத் தருவதாகும். இன்பமான நல்வாழ்வுக்கு வித்தாக விளங்கும். ஒழுக்கம் வாழ்க்கையில் மனிதர்கள் உயர் நிலையை அடைய வழிவகுக்கும் .நற் பெயரைப்பெற்றுத்தரும். சமூகத்தில் நன்மதிப்பையும் , மரியாதையையும் பெற்றுத்தரும். திருவள்ளுவர் , சுப்பிரமணியபாரதியார் , ஔவையார் போன்ற பெரியோர் பலர் ஒழுக்கத்தையும் வாழ்வில் வெற்றிபெறும் வழியையும் எமக்குக் கூறியுள்ளார்.எனவே சிறந்த நூல்களில் கூறப்பட்டுள்ள ஒழுக்க விழுமியங்களை நாம் பின்பற்ற வேண்டும்.

கி.கிறிஸ்டினா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்போம்

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பது பழமொழியாகும்.நோயற்ற வாழ்வில் நாம் வாழவேண்டும் என்பது தான் வள்ளலார் இறைவனிடம் வேண்டும் வேண்டுகோள்.இதற்கு நம் வீட்டுத் தூய்மை மட்டும் போதாது.சுற்றுச் சூழல் தூய்மையும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும்.சுற்றுப்புறச் சூழலானது இன்று பல காரணங்களால் மாசடைந்து காணப்படுகின்றது.அதனை பாதுகாப்பது நமது முக்கிய கடமையாகும்.இக் கட்டுரையில் “சுற்றுப்புறச் சூழலின் பாதுகாப்பு பற்றி அறிந்து கொள்வோம்.சுற்றுப்புறச் சூழல் மனிதர்களை ஒரு போர்க்கவசம் போன்று பாதுகாக்கின்றது.”இயற்கையோடு இயைந்து வாழ்” என்பதற்கேற்ப நாம் சுற்றுபுறச் சூழலை பாதுகாத்து இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும்.சுற்றுப்புறச் சூழலின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

எம்மைச் சுற்றியுள்ள சுற்றுப்புறச் சூழல் நிலம் , நீர் , காற்று என அனைத்தும் மாசடைந்து வருகின்றன.நிலமாசு என்பது இரசாயன பொருட்கள் நிலத்துடன் கலப்பதாலும் , தொழிற்சாலை கழிவுகள் கலப்பதாலும் ஏற்படுகின்றது.நீர் நிலைகளில் தொழிற்சாலை கழிவுகள் கலப்பதாலும் ஏனைய பல காரணங்களாலும் நீர் மாசடைகின்றது.காற்றானது தொழிற்சாலைகளிலும் ,

வாகனங்களிலும் இருந்து வெளியேறும் நச்சுப்புகையினால் மாசடைகின்றது.இதனால் புவியின் வெப்பம் அதிகரித்து நில வரட்சி , கடல் மட்டம் அதிகரிப்பு , பனிக்கட்டி உருகுவது போன்றவை ஏற்படுகின்றன.இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து நாம் சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்க வேண்டும்.

அவ்வாறே மரங்களை நடுவது , காடுகளை வளர்ப்பது , சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுகளை வெளியேற்றுவது , அதிக மாசுபாட்டை உண்டாக்கும் திட்டங்களை கைவிடுவது இவற்றால் மட்டுமே சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க முடியும். இயற்கை உரங்களையே பயன்படுத்த வேண்டும்.மாணவர்களாகிய நாம் தமது வீடு , பாடசாலை மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். மரங்களை நட வேண்டும். மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். குப்பை தொட்டிகளில் குப்பைகளைப் போடுமாறு மக்களை அறிவுறுத்துதல் வேண்டும்.நாம் எம் செயற்பாடுகளினால் சூழல் மாசடையாது பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டும். இது எம் முக்கிய கடமை என்பதை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும்.

**கி.டாணியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பு உலகை வெல்வதற்கான ஆயுதம்

இன்றைய நவீன உலகமானது பூகோள கிராமமாக சுருங்கி மனிதர்களின் இயந்திரமயமான வாழ்க்கைக் கோலத்தால் நிறம்பிக்காணப்படுகின்றது.அவ்வகையில் மனிதன் தன் வாழ்வின் அன்றாட காரியங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற இயந்திரங்களோடு தன் வாழ்வை கழித்து வருகின்றான் .இவ்வாறு உலகில் தன் இலட்சியப்பாதையில்தான் வீர நடை போட்டு வாழ வேண்டும் என எண்ணும் மனிதர்கள் பலர்.இவ்வாறான மனித நதி இன்றும் என்றும் செழிப்புடன் சீறி ஓடவேண்டுமாயின் வாசிப்பு அவர்களுக்கான முதல் ஆயுதமாகும்.

நாம் சிறு வயது முதலே "வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்" எனும் சான்றோரின் கருத்துக்களை கற்று வருகிறோம்.இதன் மூலம் அந்த கல்விப் பெருந்தகைகள் உணர்த்த விளைவது யாது? ஒரு மனிதன் தன் வாழ்வில் எவ்வளவிற்கு புத்தகங்கள் வாசிக்கிறானோ அவ்வளவில் அவன் உலகை பற்றிய பல தெளிவுகளை பெறுகிறான். இதுவே இக்கூற்றின் கருத்தாகும் . நாம் வாழும் வாழ்வோ சிறிது. அக் குறுகிய கால வாழ்வில் முடிந்தவரை பல நூல்களை வாசிப்பதன் மூலம் அவ்வாழ்வில் பல நிலைகளில் நாம் வெற்றியடையலாம்.

இன்று இவ்வுலகம் வியந்து பார்க்கும் திருவள்ளுவர் , மகாத்மாகாந்தி , விவேகானந்தர் போன்றோர் வாசித்ததால் உலகை வென்றவர்களே."வாசிப்பதால் எவ்வாறு உலகை வெல்லலாம்?" எனும் ஐயம் உங்களுக்குள் தோன்றியிருக்கும். அதை நான் தெளிவுறுத்துகின்றேன். வாசிப்பு என்பது நாம் பாடப்புத்தகங்களை வாசித்தல் மட்டுமல்ல. பல்வேறு துறைகளிலும் பரந்துபட்ட அறிவை தமதாக்குவதன் மூலமே இவ்வுலகினை எம்மால் புரிந்து கொள்ள இயலும். அவ்வகையில் பல விதமானவற்றை வாசிக்கும் போதே நமது இலட்சியத்தை நாம் அடையலாம்.

பலவிதமானவற்றை வாசிக்க வேண்டும் என்பதன் கருத்து நமது மூளைக்கும் அறிவுக்கும் விருந்தாய் அமையத்தக்கதும் மன அமைதியை ஏற்படுத்துவதும் வாசிக்கும் ரசனையை தூண்டத்தக்கதுமான நூல்களே நாம் வாசிக்கத் தகுந்தவை. இந்நூல்களே எம்மை சரியான இலட்சியப் பாதைக்கு வழிகாட்டும். இவ்வாறு ஒவ்வொரு தனிமனிதனும் வாசிப்பினால் முன்னேறும் போது அவனது வெற்றி முழு சமூகத்தினதும் , முழுநாட்டினதும் வெற்றியாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

எதிர்கால மனிதநதியானது செழிப்பாக சீறி ஓட வாசிப்புப்பழக்கத்தை எமது சந்ததியினுள் நாம் உட்புகுத்த வேண்டும். இன்றைய காலகட்டத்தில் இனரீதியான போர்களால் உலகம் மடிந்து விடுகிறது. வெறும் ஏட்டுக்கல்வியை மனதில் நிறுத்தி மனித உணர்வுகளை புரிந்து கொள்ளாத ஜடங்களே இப்போரில் ஈடுபடுகின்றனர்.ஆனால் அவர்கள் ஒன்றைப்புரிந்து கொள்ள வேண்டும். போர்களினால் ஒரு நாடு மற்றொரு நாட்டை வெல்வதனால் பெறும் வெற்றி காலத்தால் அழியத்தக்கது. ஆனால் மனித மனத்தினை உணர்ந்து உலகின் அவலநிலையை நூல்கள் மூலம் வாசித்தறிந்து அதன் வழி போரையும் அதர்மத்தையும் அழிக்க முயலும் ஒவ்வொரு தனிமனிதனது வெற்றியும் காலச்சக்கரத்தில் மெய்கீர்த்தியாக பதியத்தக்கது.

இதற்கு சிறந்த உதாரணம் , மஹாத்மா காந்தியடிகள் அஹிம்சாவழியில் நின்று இந்தியாவை மீட்டார். அவர் விடுதலைக்காக பல முறை சிறைவாசம் அனுபவித்தவர்.சிறைவாச நாட்களில் கூட தன் நேரத்தை வீணாக கழித்ததில்லை. பல புத்தகங்களை வாசித்தார். அவர் வாசிப்பின் மேல்கொண்டிருந்த ஆர்வமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறைவாசத்தையும் அவர் வீட்டிலிருப்பதாகவே உணர்த்தியது. வாசிப்பினால் ஏற்பட்ட பற்று அவரது எல்லா விதமான கவலைகளையும் மறக்கச் செய்தது. அவருடைய விடாமுயற்சி , வாசிப்பினால் அவர் பெற்ற அனுபவம் இந்தியாவின் சுதந்திரத்திற்கு ஓர் முக்கிய மைல் கற்களாக விளங்கின.

இவ்வுலகை வென்றவர்கள் , பலதுறைகளிலும் சாதித்வர்கள் அனைவரினதும் அனுபவமே நூல்களாகும். ஒரு தனிமனித அனுபவத்தால் நூல்கள் படைக்கப்படுவதல்ல. பல மனிதர்களின் அனுபவவாழ்க்கையை நாம் கற்றறியும் போது உலகினை புரிந்து கொள்ளவும் அதன் முக்கிய பங்காளராகவும் எம்மால் மிளிர இயலும். சிறு வயது முதலே வாசிப்பினை தமதாக்குவதன் மூலம் பேச்சாற்றல் , பரந்துபட்ட அறிவு , மன அமைதி எமக்குக் கிட்டும்."குறைகுடம் தளும்பும் . நிறைகுடம் தளும்பாது" இக்கூற்றிற்கேற்ப அறிவு நிறம்பியுள்ள ஒருவர் வாசிப்பதன் மூலம் மேலும் தனது அறிவுக்கடலை முத்துக்களாகிய நற்பண்புகளாலும் நவரத்தினங்களாகிய நல்லனுபவங்களாலும் நிரம்புவாரேயன்றி வீணாக பேசிப் பேசி காலத்தை கடத்த மாட்டார்.

"கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு" இது யாவருக்கும் தெரிந்த கூற்று.வெறுமனே பாடநூல்களை மட்டும் வாசிக்காது பல நூல்களையும் வாசிக்கும் போதே நாம் வாசிக்க வேண்டியது எவ்வளவோ உள்ளது என்பதை எம்மால் புரிந்து கொள்ள இயலும். மேலும் ஒரு மொழியை வளப்படுத்துவதற்கும் அதனை பிரபலமடையச் செய்வதற்கும் வாசிப்பு ஓர் சிறந்த வழியாகும்.மனித நாகரிகம் படிப்படியாக வளர்ச்சியடையும் போது வீழ்ச்சியில் கிடந்த கிரேக்க , இலத்தீன் மொழிகளுக்கு வாசிப்பின் மூலமே புத்துணர்ச்சி அழிக்கப்பட்டன.

அவ்வகையில் நமது தாய்மொழியான தமிழ் மொழியையும் நாம் வாசிப்பினால் பாதுகாக்க இயலும். நமது இலட்சியப்பாதையில் காணப்படும் தடைகளை தகர்த்தெறிய நமது இலட்சியத்துடன் தொடர்புடைய பலவற்றையும் நாம் வாசிக்கும் போது அத்தடைகளை வென்று நமது குறிக்கோளை அடைய இயலும்.

எனவே மேற்கூறப்பட்டவற்றினூடாக நாம் விளங்கிக்கொள்வது யாது? ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வின் ஒவ்வொரு தடைகளையும் தாண்ட "வாசிப்பு" மிகப்பெரிய ஆயுதமாக திகழ்கிறது. இவ் ஆயுதத்திற்கு மிகப்பெரிய சக்தி உண்டு. அணு ஆயுதங்களும் இதற்கு முன் தோற்றுப்போய்விடும். அணு ஆயுதங்களால் எதிரியினை நிர்மூலமாக்க முடியுமே தவிர அதன் பின் வரும் விளைவுகளை முற்றாக நிறுத்தும் சக்தி அதற்கில்லை.ஆனால் வாசிப்பு எனும் ஆயுதத்தால் எதிரியினையும் புரிந்து கொண்டு அப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வினை காண இயலும். இதனாலேயே "வாசிப்பானது உலகை வெல்வதற்கான ஆயுதம்" என உலகத்தவர் பலராலும் அறியப்படுகிறது. இதன் காரணமாக இலக்கியங்களை அறிவுக்குணவாக உண்டு உலகியல் இரசனையை பருகி தாய்மொழியின் இனிமையை நுகர்ந்து வாசிப்பையே முழு மூச்சாகவும் உயிராகவும் கொண்டு வாழ்வோமாக!

**ES/07**
**1 ம் இடம்**
**ரு.தியாநிவேதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நவீன தொழினுட்ப காலத்தில் வாசிப்பு அவசியமா?

எம்முடைய இவ் உலகமானது தற்போது விஞ்ஞான துள்ளல் துள்ளி நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டே செல்கின்றது. ஒவ்வொரு மணித்தியாலமும் ஏன் ஒவ்வொரு நிமிடமும் நாம் வாழும் இவ் உலகமானது முன்னேறிக்கொண்டே செல்கின்றது எனக் கூறினால் கூட மிகையாகாது. அவ்வாறான நவீன காலத்தில் வாழும் மக்களான எம்முடைய நிலைதான் யாது? இவ்வாறானதோர் கேள்விக்கான பதிலை நோக்குவோமானால் நாமும் உலகுடன் சேர்ந்து முன்னேறிக் கொண்டு இருக்கின்றோம் என்பதே விடையாக அமையும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. இன்றைய உலகில் வாழும் மக்கள் தற்போது பல விடயங்களுக்கு வாழ்வில் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஆவ்வாறு முக்கியம் கொடுக்கும் விடயங்களிற்கு உதாரணமாக கல்வி , மருத்துவம் , கணினி என்று கூறிக்கொண்டே செல்லலாம்.

ஆந்தவகையில் தற்போதைய கால மனிதர்களின் மிகக் குறைந்த கவனத்தைப் பெற்ற ஓர் விடயமாக வாசிப்பைக் கூறலாம். ஏனெனில் தற்கால மக்கள் தங்களது வேலைப்பழு மிக்க வாழ்க்கைக் கோலத்தில் வாசிப்பைப்பற்றி நினைக்கக்கூட நேரமில்லை. இதை ஒரு காரணமாகக் கூறினாலும் வாசிப்பைப்பற்றி அறியாமை அதன் , நல்விளைவுகளைப் பற்றி அறியாமை போன்றவற்றையும் கவனம் குறைக்கப்பட்டமைக்கான காரணங்களாகக் கூறலாம். அவ்வகையில் தற்போதைய நவீன தொழினுட்ப காலத்தில் வாசிப்பு அவசியமாகவே உள்ளது.

ஏனெனில் சில மனிதர்கள் வாசிப்பினைப் பற்றி சிந்திப்பதில்லை எனினும் எம்முள் சிலர் வியக்கத்தக்க வகையில் வாசிப்புப்பழக்கத்தை கைக்கொண்டே வருகின்றனர்.சிலரிடம் வினவினால் வாசிப்பதினால் என்ன பயன்? எமது நேரமே வீணாகி விடும் என்று கூறுவர்.அவ்வாறு கூறுபவர்கள் அறியாமை மிக்கவர்களாகவே காணப்படுவார்கள் என பேராசிரியர் காணர் தமது நூலொன்றில் கூறியுள்ளார்.அந்த வகையில் தற்போதைய சூழ்நிலைமைகளின் போது வாசிப்பு என்பது முக்கியமான ஒன்றாகவே காணப்படுகின்றது. ஏனெனில் தற்போது பெரியவர்களில் ஆரம்பித்து மாணவர்கள் , சிறுவர்கள் , குழந்தைகள் என அனைத்து வயதினரும் நவீன தொழினுட்பத்தில் மூழ்கி அதன் பிரதிகூலங்களினால் அல்லல் பட்டுக் கொண்டே இருக்கின்றனர்.நவீன தொழினுட்பம் ஆனது எமக்கு பல்வேறு நன்மைகளைத்தருகின்ற போதிலும் எண்ணுவதற்கு அரிய சிற்சில பிரதிகூலங்களையும் தருகின்றது.

அவ்வாறு நவீன தொழினுட்பமானது தற்கால மனிதர்களுக்கு மன அழுத்தத்தை வழங்கும் மூலங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. தற்போதைய மனிதர்கள் என்பதை விட சிறுவர்களே மன அழுத்தத்திற்கு அதிகம் உள்ளாகின்றனர். ஏற்கனவே கல்வி எனும் மன அழுத்தத்தில்உள்ள மாணவர்கள் நிம்மதியைப்பெற வேண்டும் என்று தொழில்நுட்பத்தை நவறான வழிகளில் பயன்படுத்துகின்றனர். அவ்வாறு பல பிரச்சினைகளை ஒன்றன் பின் ஒன்றாக கூறிக்கொண்டே செல்லலாம். படிப்பினால் அதாவது கல்வியினால் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளாக இருப்பினும் வேறுவழிகளில் ஏற்படும் பிரச்சினைகளாக இருப்பினும் அதிலிருந்து விடுதலை பெற கூறக்கூடிய ஓர் வழியாக வாசிப்பினைக் கூறலாம்.

வாசிப்பு எனும் போது புத்தக வாசிப்பை மாத்திரம் கூற முடியாது. புத்திரிகை , சஞ்சிகை , சிறு கதைகள் , நாவல்கள் என எதனை வாசித்தாலும் அதனை வாசிப்பாகக் கருதலாம் .வாசிப்பதன் மூலமாகவே எமது வாழ்க்கையில் பல பிரச்சினைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தீர்வுகளைக் கண்டுகொள்ளலாம். இது வாசிப்பினால் தற்காலத்தில் ஏற்படும் ஓர் அனுகூலமாகும். சிறுகதை , கட்டுரைகள் என்பனவற்றை வாசிப்பதைவிட சிறந்த அறிஞர்களின் நூல்கள் , சுயசரிதைகள் என்பவற்றை வாசிக்கும போது எமது அறிவானது மென்மேலும் விருத்தி அடைகின்றது. இதனைவிட நவீன காலத்து மக்கள் தங்களுக்கு கிடைக்கும் நேரங்களில் தொலைபேசி , தொலைக்காட்சி என்று தொழில்நுட்பவிடயத்திலே தங்களது கவனத்தை செலுத்துகின்றனர்.

மேற்கூறிய விடயங்கள் அவர்களுக்கு நன்மையை அளித்தாலும் அவ்வாறு கிடைக்கும் இன்பமானது சிறிது காலத்திற்கு மாத்திரம் நிலைக்கும் இன்பமாக உள்ளது. ஏனெனில் தொடர்ந்து தொலைபேசியையோ அல்லது தொலைக்காட்சியையோ பயன்படுத்தும் போது அது முதலில் எமது பார்வையையே பாதிக்கின்து. தொடர்ச்சியாக பாவனை செய்தால் எமது பார்வையே இல்லாமற் போய்விடும். ஏவ்வாறாயினும் தங்களுக்கு கிடைக்கும் நேரங்களை வீணேசெலவிடாமல் வாசிப்பில் செலவிடுவது பாரிய நன்மையையே எமக்கு அளிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சில விஞ்ஞானிகள் மற்றும் உலகை வென்றவர்களின் கருத்தின் படி வாசிப்பானது எமது மூளையின் சிந்தனை விருத்தியைத் தூண்டி அறிவு விருத்தியினை ஏற்படுத்துகின்றது என்று நம்பப்படுகின்றது.

"அரிது அரிது மானிடராய் பிறத்தலரிது" எனும் ஔவைப்பாட்டியின் கூற்றிற்கு அமைய நாம் அனைவரும் கிடைத்தற்கு அரிய மானிடப்பிறவியைப் பெற்றுள்ளோம்..அவ்வகையில் அவ்வாறான மனிதப்பிறவியின் பயனை முற்றாக அனுபவிக்க நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.மேற்கூறியவற்றிற்கு அமைய நவீன தொழில் நுட்ப காலத்தில் வாசிப்பு அவசியமா? எனும் கேள்விக்கு ஆம் எனும் பதிலை கூறுவது மிகச்சிறந்ததாகும். அதிக நேரம் இல்லை எனினும் எமக்கு கிடைக்கும் சிறிய சிறய நேரங்களிலாவது வாசிப்புப் பழக்கத்தைக் கைக்கொண்டு வாழ்வில் முன்னேறி வளம்பெறுவோமாக.

"உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே"

***ES/12***
***2ம் இடம்***
***ந.சாருதி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# (வாசிப்பு உலகை வெல்வதற்கான ஆயுதம்)

தற்போது மிகத்துரிதமாக மாற்றமடைந்து கொண்டு வரும் எமது உலகத்தில் பல்வேறுவகைப்பட்ட பொழுதுபோக்குகள் மற்றும் அறிவை தேடுவதற்கான வழி காணப்பட்டாலும் அதில் தலைசிறந்தது வாசித்தல் ஆகும்.ஆயுதம் என்பது எல்லோரையும் கட்டுப்படுத்தும் ஒரு பொருள் ஆகும்.ஒருவரிடமோ அல்லது ஒரு நாட்டிடமோ ஆயுதபலம் காணப்பட்டால் அவரை அல்லது அந்நாட்டை பார்த்து எல்லா மக்களும் அஞ்சுவர். அதேபோன்ற சக்தி இப்பிரபஞ்சத்தில் வாசிப்பை தவிர வேறொரு நடவடிக்கைக்கும் இல்லை என்பது நாம் கவனத்திற்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விடயம் ஆகும்.எவராலும் கட்டுப்படுத்த முடியாதவனைக் கூட அவனிடம் வாசிப்பு எண்ணத்தை தூண்டி அதில் அவனை ஈடுபடுத்தி நல்ல ஒருவனாக மாற்றமுடியும்.

இக்கால நவீன யுகத்தில் சிறு குழந்தைகள் தொடக்கம் வயது வந்தோர் வரை எவரும் வாசிப்பை தங்கள் வாழ்வில் முக்கியத்துவப்படுத்துவதில்லை.அதிக வேலைப்பழு காணப்படுவதன் காரணமாக வாசிப்பிற்கு அவர்கள் தங்கள் நேரத்தை ஒதுக்குவதில்லை. இப்போது வளர்ந்து வருகின்ற சந்ததியினர் வாசிப்பு என்ற விடயத்தை அடியோடு மறந்துவிட்டார்கள். இதற்கு முக்கிய காரணம் அவர்களது பெற்றோர்களே.அவர்கள் பணம் சம்பாதிக்க வேண்டும் , மற்றவர்களை போல் ஆடம்பரவாழ்க்கையை வாழவேண்டும்என்பதற்காக கூடுதலாக தம்மை சிரமபடுத்தி உழைக்கிறார்கள். இதனால் இவர்களது தோன்றல்கள் அதாவது பிள்ளைகளின் நலத்தை பற்றி கருத்திற் கொள்வதில்லை. அதனால் அந்த பிள்ளை சிலசமயங்களில் தவறானவர்களுடன் சேர்ந்து தனது வாழ்க்கைக்கான பாதையை பிழையாக தெரிந்தெடுக்கிறது. சுயஅறிவு அப்பிள்ளையிடம் மிகக்குறைவாகவே காணப்படுகிறது. வாசிப்பதனாலே எமது அறிவை எம்மால் வளர்த்துக் கொள்ள முடியும். ஆனால் இப்பிள்ளைகளிடம் வாசிப்பு பழக்கம் காணப்படாததால் அவர்களின் அறிவு சற்று குறைவாகவே காணப்படுகிறது.

வாசிப்பதனால் என்ன நன்மை கிடைக்கப்போகிறது ? எனஎல்லோரும் நினைக்கிறார்கள். ஆனால் அதனால் உள்ள எண்ணிலடங்காத நன்மைகளை அவர்கள் அறியாதவர்களாகவே இன்று வரை வாழ்கின்றனர் என்பது இழிவான ஒரு விடயமாகவே உள்ளது.வாசிப்பதனால் உள்ள நன்மைகளை நாம் நோக்குவோமானால் அதில் மிகப்பிரதானமானது அது எமது அறிவை விரிவடைய செய்யும்.பல்வேறு வகையான புத்தகங்கள் காணப்படுகிறன. அதில் சிறந்த புத்தகங்களை தெரிந்து வாசிக்கும் போது எமது அறிவானது பன்மடங்கு உயரும்.ஒருவன் தான் இருந்த நிலையிலிருந்து முன்னேற வேண்டுமாயின் அவன் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த உத்தி வாசிப்பை நித்தமும் மேற்கொள்வதே ஆகும். பிற சொத்துக்களை எல்லோராலும் களவாட முடியும்.ஆனால் வாசிப்பு , அதனால் பெற்ற அறிவு என்பன பல வீட்டுக்குள் புகுந்து திருடிய தந்திரசாலியான திருடனாலும் களவாடப்பட முடியாதது.அதனை நாம் கைகளால் தொட்டுணரமுடியாவிட்டாலும் அதன்மூலம் பெற்ற அறிவை நமது நடத்தைகள் , பழக்கவழக்கங்கள் என்பன மூலம் எல்லோராலும் அறிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நவீன தொழிநுட்ப யுகத்தில் வாசிப்பு என்பது அருகி வருகின்ற ஓர் விடயமாக காணப்படுகின்றது.அனைவரும் தொலைபேசி , செல்பேசி போன்ற கருவிகளுக்கு அடிமையாக காணப்படுவதால் அவர்கள் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை கைவிடுகின்றனர்.எல்லா விடயங்களையும் காணொளிகள் , படங்கள் மூலம் அறிந்து கொள்ள முற்படுகின்றனர்.இது எமக்கு பல்வேறு தீமைகளை அழிக்கின்றது.எமது கண்பார்வை குறைவடைகிறது , எமது நரம்புக்கலங்கள் பாதிக்கப்படுவதால் மூளை மற்றும் ஏனைய உறுப்புக்கள் என்பன பாதிக்கப்பட்டு பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. எமது அறிவாற்றல் , மொழியாழுமை , கிரகித்தல்திறன் என்பன குறைவடைந்து செல்கின்றன.அதற்கு மாறாக நாம் புத்தகங்களைஅதிகமாக வாசிக்கும் போது இவ்வாறான ஆற்றல்கள் எம்மிடம் வளர்ந்து கொண்டு வருவதனைக்காணமுடியும். நாம் ஒரு மொழியை கற்க வேண்டுமானால் அம் மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களை வாசித்தாலே சில நாட்களுக்குள் அம் மொழியினை கற்று விடலாம். எமது தாய்மொழி தமிழில் கூட நாம் ஒரு சிறந்த ஆற்றலை பெறவேண்டுமாயின் தமிழ் மொழி இலக்கியங்களை வாசித்தல் எமக்கு பெரிதும் துணைபுரியும். தமிழ் பேராசிரியர்கள் , பண்டிதர்கள் என்போர் புத்தகங்களை வாசிப்பதனாலேயே அவ்விடத்திற்கு சென்றுள்ளனர்."உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" என்பதற்கிணங்க வாசிப்பால் உயர்ந்தவர்கள் பலர் இவ்வுலகில் தோன்றி புகழ் பெற்று மாண்டுள்ளனர்.வள்ளுவத்தில் கூறியபடி "தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று"என்று குறளில் புகழ் பெறுவதற்காகவே நாம் இவ்வுலகில் பிறந்திருக்கிறோம் அவ்வாறான புகழ் பெறுவதற்கான ஒரு சிறந்த கருவி வாசிப்பாகும். வாசிப்பால் உயர்ந்தவர்களாக நாம் பல அறிஞர்களை கூறலாம். சேர் ஐசாக் நியுட்டன் மறுமலர்ச்சி காலத்தில் உரோம , கிரேக்க நூல்களை கற்றதன் பயனாகவே புவியீர்ப்பு சக்தி மற்றும் பல்வேறு கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்தார். மேலும் சுவாமி விவேகானந்தர் , மகாத்மா காந்தி , ஜவகர்லால் நேரு என்போர் வாசிப்பாலே உலகை வென்றவர்கள். பிற நாடுகளால் கைப்பற்றப்பட்ட குடியேற்றங்களில் தோன்றிய தலைவர்கள் வாசிப்பை மேற்கொண்டதாலே சுதந்திரம் தொடர்பான எண்ணக்கருவை வளர்த்தனர்.

எனவே "அரிது அரிது மானிடராதல் அரிது " எனும் ஔவைப்பிராட்டியின் வாக்குக்கு அமைய கிடைப்பதற்கரிய இந்த மானிடப்பிறவி எமக்கு கிடைத்தது வாசித்து அறிவை பெற்று புகழ்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவே. ஆகவே இவ்வுலகை வென்றோர்கள் கையாண்ட உத்தியானவாசிப்பை நாமும் மேற்கொள்வதன் மூலம் இவ்வுலகை வெற்றி பெறுவோம்.

**ES/14**
**3 ம் இடம்**
**கு.ஜகத்வினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முதல் பயணம்.................

யாழ்ப்பாணம் பற்றிய நிறையக்கதைகளை சின்னவயதிலிருந்து கேள்விப்பட்டு வந்திருக்கின்றேன் அப்பாவின் உரையாடல்களிலிருந்து. சங்கிலியன் மன்னனும் பினாட்டும், நல்லூரும் ,மாவிட்டபுரமும் ,கீரிமலையும், ஐஸ்கிறிமும் என்னில் தங்கிவிட்டன. இந்தா போவோம் அந்தா போவோம் என்று நாட்கள்தான் ஓடிவிட்டன , யாழ்ப்பாணத்தை நான் காணவில்லை. ஆனால், அந்தவாய்ப்பு இப்படி அமையும் என கனவிலும் நினைக்கவில்லை.

நான் செங்கலடியில் நூலகராக இருந்து மட்டக்களப்பு பொதுநூலகத்திற்கு நூலகராக இடமாற்றம் பெற்று வந்த காலத்தில்தான் யாழ்ப்பாண நூலகத்திற்குப் போய்ப்பார்க்க வேண்டும் என்ற ஆசை மீண்டும் எழத்தொடங்கியது.எரிந்து போன நூலகத்தின் புதிய உருவாக்கம் மட்டுமல்ல ஆசியாவின் இன்னொரு அதிசயம் மட்டக்களப்பில் உருவாகத்தொடங்கியது. முன்னால் முதலமைச்சரும் இராஜாங்க அமைச்சருமான சிவ.சந்திரகாந்தன் அவர்களால் முன்னெடுக்கப்படுகின்ற மட்டக்களப்பு புதிய நூலகம் உறங்கிப்போயிருந்த கட்டடம் வளரத்தொடங்கியது. பல்லாயிரக்கணக்கான நூல்களின் சேகரிப்பும் குதுகலிப்புச் செய்தது. இந்தச் சூழலில்தான் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் யாழ்ப்பாண நூலகங்களின் செயற்பாடுகள் , அதன் நடைமுறைச் செயற்பாடுகளை பார்வையிட வேண்டும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் சி.சந்திரகாந்தன் அவர்களால் கருத்து முன்வைக்கப்பட்டு ,ஒரு குழுவினரை அனுப்பவேண்டும் என்று என்னையும் நூலக உதவியாளர் இருவரையும் ஒப்பந்தக்காரரர் என ஒரு குழு நியமிக்கப்பட்டு அங்கு செல்வதற்கான திகதியிடப்பட்டது. அப்போது எனது நீண்ட கால ஆசைக்கு ஒரு விடிவு கிடைக்கப்போகிறதென்ற சந்தோசம் மின்மினியாகின.

2024/09/16ஆம் திகதி முதல்பயணத்திற்காக எனது செங்கலடி பிள்ளையார் கோவில் றோட்டில் Vanஎன்னை இரவு ஒன்பது மணிக்கு ஏற்றியது.லக்ஸ்மனும்,விஜியும், ஒப்பந்தக்காரரும் ,தச்சனும் அமர்ந்திருந்தார்கள். Vanவேகமெடுத்தது.பழைய நினைவுகள் வந்து வந்து போனது.நூலகராவதற்காக கொழும்பில் படித்தகாலங்கள் செக்பொயின்றை கடந்த காலம் இராமகிருஸ்ண மிசனில் தங்கியிருந்த காலங்கள் நெருடலைத்தந்தாலும் சனி , ஞாயிறு நாட்களின் கஷ்டங்கள் இன்று ஆனந்தத்தைதந்தன. இன்று நூலக விஞ்ஞானத்தை காலடியில் படிக்கக்கூடிய சூழலுள்ளது. அப்போது அது முயல் கொம்பு. கொழும்பில் மாத்திரம்தான் படிக்கமுடியும். இரவின் வெளிச்சமும் கும்மிருட்டும் எதையும் அவதானிக்க முடியவில்லை. முருகண்டியில் நாம் சென்ற வாகனம் நிறுத்தப்பட்டது. முருகண்டிக்கச்சானை நாம் முன்னர் கேள்விப்பட்டிருந்ததால் அதை வாங்கி சுவைக்காமல் விடலாமா? வாயுத்தொல்லையை தவிர்ப்பதற்காக கச்சானோடு வெள்ளவெங்காயமும் இருந்தது.கச்சான் ஒரு வகை சுவைதான். நான் .வாகனத்தை விட்டு இறங்கவில்லை. நடுச்சாமமும் நித்திரையின்னையும் தலைப்பாரத்தை ஏற்படுத்தியது.கண்கள் பத்தத் தொடங்கின. ஒரு அசௌகரியமான அந்தரித்த நிலையாக இருந்தது.விஜியின் தங்கை மல்லாகத்தில்தான் திருமணம் செய்திருப்பதால் உறவுகளைத்தேடி அங்குதான் காலைக்கடனுக்காகவும் குளிப்புக்காகவும் சென்றடைந்தோம்.மட்டக்களப்பின் விருந்தோம்பலை பார்க்க முடிந்தது.காலை உணவு எடுத்துக் கொண்டு சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நோக்கிப் பயணம் ஆரம்பமானது. சிறுவர்களுக்கான சிறந்த நூல்நிலையமாக தெரிவு செய்யப்பட்ட நூலகம் என்ற போது எதிர்பார்ப்பு அதிகரித்து.உன்னதங்களைத்தேடுவதும் அறிதலும் அதைத்தெரிந்து கொள்வதும் அந்தத் தெரிதலில் அறிவைப் பெற்று நான் கடமையாற்றும் மட்டக்களப்பு பொது நூலகத்தை வளப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை என்னை இருக்கப்பண்ணாமல் துரத்தத்தான் செய்தன. நான் ஓண்டிக்கட்டை என்பதற்காக அல்லது வீட்டுப்பொறுப்புக்கள் அதிகமற்றவள் இவள் ,எல்லாவற்றையும் வரிந்து கட்டிக்கொண்டு ஓடித்திரிகின்றாள் என்றபேச்சுக்களை காதுகேட்டும் கேட்காத பேச்சுக்களும் வரத்தான் செய்தன. வீட்டு வேலைகள் எல்லோருக்கும் ஒரேமாதிரியானதுதான். நானும் அப்பாவும் என்றாலும் அதேவேலைதான் அதே நேரம்தான் . எல்லோருக்கும் எல்லாக்கடமைகளும் ஒரேமாதிரியானதுதான். சற்று ஏற்ற இறக்கம் கொண்டதாக இருக்கும் அவ்வளவுதான்.பிறந்ததிற்கான கடமைகளைச் செய்தாக வேண்டும். சம்பளத்திற்கான வேலைகளைச்சரியாக நேர்மையாகச் செய்ய வேண்டும். தன்னலமற்ற தன்மையாக இருக்க வேண்டும். பிறப்பிற்கான அர்த்தம் இருக்க வேண்டும்.மனம் ஏதேதோ பறந்தது. காலை பத்து மணிக்கு நூலகத்தை அடைந்த போது செல்வராஜா சேர் எங்களை வரவேற்றார்.நம்மத்தியிலிருக்கின்ற பெரிய ஆளுமை கைவிரலில் விபரங்களை வைத்திருப்பவர்கள் என்றும் நாம் சொல்வோமல்லவா? லெஜன்களை அப்படி அமைப்போம் அப்படியான ஒருவர்தான் செல்வராஜா சேர்.யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் புதிய மட்டக்களப்பு நூல் நிலைய அபிவிருத்திக்கு தன்னாலான பங்களிப்பைச் செலுத்திவருகின்றார்.இங்கிலாந்திலிருந்து நூல்களை முன்னால் அமைச்சர் பிள்ளையான் அவர்களின் உதவியுடன் இருபதாயிரத்திற்கு மேற்பட்ட நூல்கள் வந்து சேர்ந்து விட்டன. அவரின் செல்போன் என்காதுகளுக்குள் இந்தக்கணமும் ஒலிக்கத்தான் செய்கின்றன. வாருங்கோ....அன்பான அழைப்புடன் Van க்கு அருகில் வந்து நூலகத்திறகுள் அழைத்துச் சென்றார்.எங்கள் நூல்நிலையம் போல்தான் அந்த நூலகம் காட்சி தந்தது. லெண்டிங் பகுதியல் பாரம்பரியமான வீடு ஒன்று அமைத்து வைக்கோலால் கூரை வேய்ந்து பழைய பண்பாட்டினூடாக ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தி இருந்தார்கள். அதில் அந்த ஊரின் எழுத்தாளர்கள் பெரியார்களின் புகைப்படங்கள் பிறேம் பண்ணி மாட்டிருப்பது எனக்கு முக்கியமாக்கப்பட்டது. எமது எழுத்தளர்களை நாங்களே கொண்டாடவேண்டும் மதிக்க வேண்டும். செல்வராசா சேரின் விரிவுரைகள் நீண்டு கொண்டே போனது அப்போதுதான் கண்பார்வையற்றவர்களுக்கான நவீன வசதி வாசிப்பை எடுத்துரைத்து அந்தக் கருவியைக் காண்பித்தார். புத்தகங்களின் பக்கங்களை ஸ்கேன் பண்ணிவிட்டால் அந்தப் பக்கத்தின் விடயத்தை ஒலிவடிவத்தில் கேட்கலாம். கண்பார்வையற்றவர்கள் பிரலியோ அல்லது இன்னொருவர் வாசிக்க வேண்டியதோ இல்லை.விஞ்ஞான வளர்ச்சியின் மகத்தான சாதனைதான் இது. சிறிது நேரத்தில் சிறுவர் பகுதியை பார்வையிட்டோம். வெளிநாட்டு பொம்மைகளும் விதம்விதமான வெவ்வேறு உருவம் கொண்ட பொம்மைகளும் நிறைந்திருந்தன. புத்தகங்களும் இருந்தன. பிள்ளைகளை கவர்வதற்கான உத்திதான் அது. பாலர் வகுப்பு மாணவர்களுக்கு சரி. மற்றையவர்களுக்கு இது? என்னில் பல கேள்வி எழுந்தாலும் சுன்னாகம் நூலகம் சிறுவர் பகுதிக்காக முதலிடம் பெற்றுள்ளது.எப்படியிருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனம் இருப்புக்கொள்ளவில்லலை. ஏதிர்பார்த்த தொலைபேசி வரவில்லை. நான் எடுத்தாலும் நிறுத்தப்படுவதும் எடுப்பதுமாக அன்றைய விஜயத்திற்கு இடையூறு நிகழ்த்திக் கொண்டேயிருந்தது.பெரும்மூச்சி பீறிட செல்வராஜா சேர் என் கவலையை புரிந்திருக்க வேண்டும். "சரி நாம் யாழ்ப்பாண லைபரிக்குப்போவோம்" என்றார். ஊற்சாகம் குற்றியவளாக யாழ் நூல்நிலையத்தை அடைந்தோம். பெரும் நூலகம்தான். பலபகுதிகள் நிறைந்த அறைகள். எங்கும் புத்தகம். அரிதான புத்தகங்கள் ,அறியாத புத்தகங்கள் என்று இருந்தன.பத்திரகைப்பகுதியே சிறப்பான ஆவணப்பகுதியாக இருந்தது.இலங்கையில் வெளிவந்த பத்திரிகைகள் , சிற்றிதழ்கள் முதலியன பாதுகாக்கப்பட்டிருந்தன. ஒரு கணம் நூலகம் எரியுண்ட காலம் நினைப்பைக் கிளறியது. ஏரியாவிட்டால் இன்னும் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும். அன்று நூலகர் இருக்கவில்லை. உதவிநூலகரும் உதவியாளர்களும் தங்கள் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். கடமை என்பது சம்பளத்திற்கானதல்ல.அதற்கு அப்பாற்பட்டது.கடமையைச் செய் பலனை எதிர்பாராதே! தன்னலமற்று ஒரு வேலையில் ஈடுபட்டால் அது உன்னைக் காக்கும். என்னோடு ஒப்பந்தக் காரர் , தச்சன் ஆகியோர் தளபாடங்களையும் ஏனைய செல்புகளையும் பார்வையிட்டார்கள். எங்களின் வருகை பெரும் படிப்பினைத் தராவிட்டாலும் ஓரளவு அனுபவப் படிப்பைத் தந்தது. அந்தத் திருப்தியோடு மட்டக்களப்பு நோக்கி Van பயணித்தது.

'எல்லோரும் மனதார சேவை செய்தால் நமக்கான வெற்றி காலடியில்த்தான்'

**த.சிவராணி**
**நூலகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெத்தியடி

**அ**டங்க மறு அநியாயம் கண்டு

**ஆ**த்திரம் கொள்…………

**இ**றைவனை நினை – எப்போதும்

**ஈ**சனே துணை

**உ**ற்று நோக்கின் இவ் உலகில்

**ஊ**ரார் இல்லை

**எ**ல்லோரும் ஒன்று – எப்போதும்

**ஏ**ழைக்கு உதவு………….

**ஐ**ம்பொறி அடக்கு அகிலம் உனக்கு

**ஒ**ப்பனை தவிர் - எப்போதும்

**ஓ**டி விளையாடு ஒருபோதும்

**ஔ**டதம் வேண்டாம்………..

- **கஇரா–**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பை நேசிப்போம்

வாழ்தல் இனிது வையகத்தல்
வீழ்தல் கொடிது வாழ்விலே
அறிதல் வேண்டும் தோல்வியே
தெரிதல் கொள்வது வாசிப்பிலே

வெறுமை நீக்கும் மருந்தது
பெருமை சேர்க்கும் விருந்தது
இருளை விலக்கும் ஒளியது
பொருளை தேடும் வழியது

புலமை ஊட்டும் விந்தை
நிலமை உணர்த்தும் சிந்தை
அறிவுத் தேடலின் முதற்படி
ஆழக்கற்றலின் வாசற்படி

மனதினால் உலகை படைப்பது
அறிவின் ஆற்றலை வளர்ப்பது
உன்னை உனக்கே உரைப்பது
உயர்வைத் தருமே வாசிப்பது.......

**தே.கரிதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நூலகம் செல்வோம்

நூலகம் வாழும் உறைவிடம்
நாங்கள் தேடும் அறிவகம்
என்றும் அமைதி பேணிடும்
எல்லா அறிவும் தந்திடும்

வகை வகையாய் பகுத்திட்டே
வரிசையாக அடுக்கி இருக்குமே
பாலர் முதல் பாவலர்
பலரும் படிக்கும் ஒரேயிடம்

எத்துறை நாம் தேடினும்
அத்துறை அறிவு பெறுவோமே
எல்லை இல்லா தகவலை
எடுத்து தருமே நூலகம்

வாசிப்பின் அருமை புரிந்திட்டால்
வாழ்க்கை என்றும் இனியது
வாழும் காலம் சிறந்திடும்
வானம் அறிவின் வசப்படும்.

**தே.கரிதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கனவாய் விரிகின்ற இருள் குகை

மனக்கணக்கை வாய்ப்பாடாக எண்ணுகின்ற
பாம்பாட்டி
மகுடியை ஊதத்தொடங்கிவிட்டான்.

நாக்கிளியான் புழுக்கள்
ஊரத்தொடங்கிவிட்டன
லங்காபுவத் செய்திக்கு
மவுசற்றுப்போய்
காலம் நகர்ந்திருப்பது
பாம்பாட்டிக்குத் தெரியாதது ஒன்றா என்ன?

புணநாற்றத்தினுள் மூழ்கிக்கிடக்கின்ற நரிகள்
சிங்கத்தின் குகையில்
எச்சில் உமிழ
கனவாய் விரிகிறது இருள்குகை.

மருண்ட காலநீட்சியில்
அறுந்த நாக்குகளின்
ஓசைகளுக்கு
சன்னதங்கள் களைகட்டவில்லை என்பது
அவர்களுக்கு...
மழைநீரில் நிரம்பாத குடம்போல உருண்டது.

எனினும்
ஒவ்வொரு முறையும்
தோய்ந்து பளபளக்கும் கத்தி மரணத்தின் வெகு அருகில் மீள மீள எழ
வாய்ப்பாட்டை அறுத்தெறிந்த
பாம்பாட்டியும்
செம்படவனும்
முணுமுணுக்கின்ற தோத்திரத்திற்கு
என்னதான் பொருள்?

**த.மலர்ச்செல்வன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யானை கடந்த ஆயிரம் காடுகள்

யானை கடந்த ஆயிரம் காடுகள் ..................
பெரு வெடிப்புக்
காலத்தில்
அந்த யானை அசைந்து
அசைந்து ஆயிரம் காடுகளைத்தாண்டத்தான் செய்தது......
பிளவுகள் வீங்கிக்கிடந்த
புட்தரையில் புழுதி கிளப்பி
காலம் கடத்திய யானை
இலக்கற்றே பயணித்தது.
பாவம்
பிளவுகள் சுனையாகப்பெருகி
சுரியாக மாண்ட பொழுது
யானை மாட்டுமென
அது கனாக்கூடக் கண்டிராது.

அங்குச வலியின் மீட்சிக்காய்
தறிகெட்டுப்போன போதகம்
வாழ்வின் எல்லையை முடித்தபோது
ஒரு தவளை மீண்டும் சுரியில் குதித்தது

நான் இந்த செய்தியை நம்பவில்லை
மீண்டும் மீண்டும் வாசித்தேன்
ஒற்றைக்காலில் நின்றேன்
யானை துரத்திய காலத்தை மீட்டினேன்
பிளவுகளில் அகப்பட்ட பாதத்தை உதறிப்பார்த்தேன்
குதிகாலில் ஆமணக்கு எண்ணை தடாவிய கணங்கள்
மின்னல் வெட்டாக மறைந்தன.

கறுப்புக்குள் தேடினேன்
மை அழிந்து விட்டன
கண் புகை கக்கியது
என்னை விழுங்குமென அச்சம் கொண்டேன்
தேகம் முழுதும் உதறல்
நெருஞ்சிக்குள் நான் கால் வைத்தது
என் அறியாமை
இதை இப்போ புலம்பி என்ன பயன்
யானையின் பிளிறல்
செவிப்பறையை உடைத்தது
நான் கண்ணை மூடினேன்
கருந்துளையொன்று
என் பாதத்திற்கு முன்
விரியத்தொடங்கியது
இம்முறை பாதம் அகப்படவில்லை.
ஆனால் அடுப்பங்கரை தணல் கக்கத்தொடங்கிவிட்டது.

த.மலர்ச்செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மலச்சிக்கல்

(உணவே மருந்து)

சாதாரணமாக மக்களுக்கு வரக்கூடிய எல்லாவிதமான நோய்களுக்கும் வழி திறந்து விடுவது மலச்சிக்கல்தான். மலச்சிக்கலில் ஆரம்பித்துத்தான் எத்தனையோ நோய்கள் வளர்ந்து பெருந்தொல்லைகளைத் தருகின்றன. மலச்சிக்கல் ஒரு நோய் அல்ல. ஏதாவது ஒரு நோயின் அறிகுறியாகத்தான் அது இருக்கும்.

மலம் கழிப்பது எப்போதுமே ஒரு வழக்கத்தையொட்டித்தான் அமையும். வைத்தியரின் ஆலோசனைப்படி அதிகாலையில் எழுந்தவுடன் மலம் கழிப்பதை வழக்கமாகக் கொண்டால் தினமும் எழுந்தவுடன் அந்த உணர்வு மலங்கழிகத் தூண்டும். அதைவிட்டு அடக்கிக் கொண்டோமானால் மறுநாள் மலம் கழிப்பதில் குழப்ப நிலை ஏற்படும்.

வைத்தியரின் ஆலோசனைக்கு அமைவாக தினமும் காலையில் எழுந்தவுடன் குறைந்தது ½ லீற்றர் தண்ணீராவது அருந்த வேண்டும். அதைவிடுத்து தேனீர் , கோப்பி என்று அருந்தினால் மலம் கழிப்பதில் சில நேரம் சிக்கல்கள் ஏற்படக்கூடும். ஆகவே முதலில் நீரை அருந்தி விட்டு ½ மணி நேரம் கழித்து தேனீரையோ கோப்பியையோ குடிக்கலாம்.

மலச்சிக்கலுக்கு மற்றொரு முக்கியமான காரணம் நேரத்திற்கு உணவு அருந்தாது கண்ட கண்ட நேரத்தில் உணவு அருந்துவது , இரவில் கண்விழிப்பது விரைவில் ஜீரணமாகாத உணவுவகைகளை உண்ணுவதும் மலச்சிக்கலுக்கு காரணமாக அமையும்.

மலச்சிக்கலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பசி இருக்காது, நித்திரை வராது, தலைவலி சிலநேரம் மயக்கமும் வரலாம் மேலும் மூல நோய் , கீழ்வாயு , மஞ்சள் காமாலை போன்ற பெரிய நோய்களும் வரக்கூடும். சில வேளைகளில் கண்பார்வையும் பாதிக்கப்படலாம். ஆகவே மலச்சிக்கல் வராமல் தடுக்கவேண்டுமானால் சரியான பழக்க வழக்கமே இதற்கு மருந்து.

உணவில் பச்சைக் காய்கறிகள் , கீரை வகைகளை அதிகமாக சேர்த்துக் கொள்ள வேண்டும். பழங்கள் கூடுதலாக சாப்பிட வேண்டும். இரவில் நேரத்திற்கு தூங்க வேண்டும். அதிகளவான நீர் அருந்த வேண்டும். எண்ணையினை உணவில் குறைத்து சேர்க்க வேண்டும். மன நிலையை எப்போதும் அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பழக்கவழக்கங்களை நாம் மேற்கொள்வோமானால் மலச்சிக்கலில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். இதன்மூலம் பெரிய நோய்களும் வராமல் எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**திருமதி.விஜயராணி விஜயநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விதியின் அறியாமை

ஞாயிறை தனக்குச் சொந்தமாக்கிக்
கொள்ள நினைக்கிறது வானம்!
ஆனால்!பாவம்
அவ்விண்ணுக்கு தெரியவில்லை
விதியைப் பற்றி பாவம்!

சந்திரனின் தன்மையான வருகை
வரைகக்கும் தான் பரிதி
தனக்குச் சொந்தம் என்பதை
அறியாமல் பரிதி வந்ததும்
களிக்கிறது விண் பின் ஏங்கிறது பாவம்!

இருளும் போது தான் தெரியுமாம்
விதி பற்றி
ஞாயிறு இருளும் வரைதான்
வானத்தின் பிள்ளையாக இருக்கும் என்று

கா.அட்சரா
(பாரதி லேன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## "வாசிப்பின் ஊற்றாய் நாம்....."

நூல்களின் நதியில் ஓடுகின்றோம்,
அறிவின் திரையால் மீளச்சிறக்கின்றோம்,
கல்வி கொண்டே மனிதர் உயர்வார்,
வாசிப்பின் விளக்கே உறுதியாய் நிற்பார்.

புத்தகத்தின் பக்கம் ஒரு சுகந்த வீடு,
அறிவின் சொற்கள் தரும் புதிய பார்வை.
மறைவின் மர்மங்கள் மெல்ல திறந்து,
உலகின் எல்லைகள் நீட்டி விரிக்கின்றது.

வாசிப்பின் ஊற்றாய் நாம் நின்றால்,
உலகம் முழுதும் நம் விழியில் தாங்கலாம்
அறிவின் வீதி நமக்குள் நகரும்,
வாசிப்பே எம் வாழ்வை உயர்த்தும்.

நாள்தோறும் புத்தகம் உறவாகி,
உலகம் முழுதும் நம்முள் பூத்திடும்.
வாசிக்கவும் வாழ்வதற்குத் துடிக்கவும்,
வாசிப்பின் ஊற்றாய் வாழ்வது எமது கடமையே!

**லோ.தாட்சாயினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புத்தகம் பற்றிய கவிதை

உன்னைத் தொட்டுத் தொட்டுப்
பார்த்தேன்.....
நீயோ வெறும் காகிதமாய்
தெரிந்தாய்

தனிமையில் உன்னை வாசித்தேன்....
என் வாழ்க்கையை உணர
வைத்தாய்.......
உன்னை தொடர்ந்து வாசித்தேன்.......
நீயோ! வெற்றியின் ஆயுதமாய்
திகழ்ந்தாய்........

நீ இல்லையென்றால் சித்திரம்
மௌனமாகி விடும்.....
இலக்கியம் ஊமையாகிப்
போகும்......!

இனி நீயோ என் உயிர்
நண்பன்............
என் உயிர் காவலன்.....
என் சுவாசக் காற்று.......

அறிவின் களஞ்சியம் ....
அமைதியின் உறைவிடம்...
புலமையின் படைப்பு.........
அறியாமையின் விடை...........
சாதனையின் சான்று...........
உண்மையின் பதிப்பு!!!

**வெணாடிக்கனேஸ் கிறிஸ்டின் ராகால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாழுகின்றசமூகத்திலே... வாழ்க்கைஎன்றால்

பாத்திரங்கள்

1. எடுத்துரைஞ்ஞன்

   தகவல் கூறுவோன்

   அம்மா (பார்வதி)

   மகன் - பார்வதியின் மகன்

   அப்பா - பார்வதியின் கணவர்

2. சுஜா

   பவித்திரா - நண்பிகள்

   எடுத்துரைஞ்ஞன்

3. எடுத்துரைஞ்ஞன்

   அம்மா - மாலா

   மகன் - மாலாவின் மகன்

   மகள் - மாலாவின் மகள்

4. எடுத்துரைஞ்ஞன்

   சுரேஸ்

   மாதவன் - நண்பர்கள்

5. எடுத்துரைஞ்ஞன்

   உறுப்பினர் - 1

   உறுப்பினர் - 2 - சிறுவர் கழகஉறுப்பினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பக்கம் - 01

### காட்சி - 01 வருகைப் பாடல் எல்லோரும்

வாங்க ... வாங்க ... இங்கே
எல்லோரும் கொஞ்சம் வாங்க ...
வந்திருந்துநாடகத்தப் பார்த்துவிட்டுப் போங்க- 2

அதிலுள்ளவிடயத்த கேட்டுப் பாருங்க.
கேட்டபின்புஉங்கவாழ்க்கையைமாற்றிக் கொள்ளுங்க.

எடுத்துரைஞ்ஞர் : என்னவாம் வாங்கவாங்கஎன்றாங்க... வாழ்க்கையைதிருத்திக் கொள்ளுங்கஎன்றாங்க... என்னவாழ்க்கையைதிருத்திக் கொள்ளபுதிசாஏதும் சாமான் வந்திருக்கோ... நாமளும் கொஞ்சம் பொறுத்திருந்துஎன்னநடக்கப் போகுதெண்டுபாப்பமே...

கூறுவோன் : நாங்க இங்கஒன்றையும் விற்கப்போறதுமில்ல... செய்து காட்டபோறதுமில்ல... இன்றையகாலகட்டத்தில் நம்மடவீட்டில,நம்மடஊர்ல,நமதுகிராமத்தில,ஏன் நம்மசமுதாயத்திலநடக்கிறசிலபிழையானசெயற்பாடுகள,தவறானநடத்தைகளப் பற்றியஒருவிழிப்புணர்வுநாடகத்தநடிச்சுக் காட்டப்போறம். பார்த்தபிறகுஎன்றாலும் நமதுபிள்ளைகள் பாடசாலைக் காலத்தைபாதியில் விட்டு இடை விலகலாகிபாதைகளில் பரதேசிகள் போல் திரிவதற்கானகாரணத்தைப் பற்றிகொஞ்சம் என்றாலும் சிந்திப்போமா... வாருங்கள் நாடகத்தைப் பாப்பம்... ஒருவீட்டில் நடப்பதைப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காட்சி - 01

**(வீட்டில் அம்மா,அப்பா,மகன் உரையாடல்)**

ஐயோகடவுளேநான் என்னத்தசொல்லுற... நல்லாபடிச்சிட்டு இருந்தபொடியனுக்கு... இந்தமனுசன் காசிஆசையக் காட்டினதால... வந்தநிலைமைய... நான் யாருட்டப் போய் சொல்லட்டும்... இந்தமனுசனகலியாணம் கட்டிணதிலிருந்து இன்டைக்குவரையும் என்டவாழ்க்கைநாசமாய் போனதுமட்டுமல்ல இப்பஎன்டபுள்ளடவாழ்க்கையையும் நாசமாக்கிப் போட்டாரே... இவன்நல்லாப் படிச்சுவந்தவன் இப்பபள்ளிக் கூடம் போறதையேவிட்டுட்டானே... 9ம் வகுப்புமட்டும் நல்லாப் படிச்சுவந்தானே... என்டபுள்ளடவாழ்க்கையநாசமாக்கிப் போட்டாரே... இவன் இனிபள்ளிக்குபோகமாட்டன் எண்டுஒத்தக்காலலநிக்கானே...

மகன் : அம்மா... அம்மா... இன்டைக்குநான் மத்தியானம் சாப்பிடவரமாட்டன்...

அம்மா : ஏன்மகன் வரமாட்டா... திரும்பவும் பள்ளிக்கூடம் போப்புறயா?... ஏதும்

வகுப்புகள் இருக்கா... அதுக்குநிண்டுதானவருவயா?

மகன் : பள்ளிக்கூடமா... அந்தப் பக்கமேபோறல்லஎண்டு இருக்கன் அதுக்குள்ள வகுப்பாம் வகுப்பு... நான் வேலைக்குப் போறன் சாப்பிடவாற நேரம் கொஞ்சம் வேலைசெய்தாசம்பளம் கூடக்கிடைக்கும் எண்டுதான்.

அம்மா : என்னவேலைசெய்யப் போறாயா... அப்பபள்ளிக் கூடத்துக்குதுண்டாப்

போறல்லஎண்டுமுடிவுஎடுத்திற்றயா?

கஷ்டப்பட்டுஉழைக்கிறநிம்மதியாவாழத்தான். ஆனா இன்னும் உனக்குவயது இருக்கு. முதல்லநீநல்லாபடிச்சுபாஸ் பண்ணிட்டா. பிறகுநல்லவேலையெல்லாம் உன்னத் தேடிவரும். நீசமுதாயத்திலநல்லபெயருடனும்,மதிப்போடயும் வாழலாம். படிக்கிறகாலத்தையும் நேரத்தையும் வீணாக்கக் கூடாதுமகனே... திரும்பவும் நீபள்ளிக்குப் போ... நான் சொல்லுறதக் கேள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மகன் : அம்மாபோங்கம்மா... சொன்னதையேதிரும்பத்திரும்பசொல்லாம... நான் இனிபள்ளிக்குப் போகமாட்டன். வேலைக்குப் போய் காசிசேக்கப்போறன். என்னபள்ளிக்குப் போஎண்டுகரைச்சல் படுத்தினாநான் வீட்டிலே இருக்கமாட்டன்.

அம்மா : ஐயோ... மகனே... நான் சொல்லுறதகேளு... உனக்குவேலைசெய்றவயசி இல்ல. நீஒழுங்கா வேலைசெய்யமாட்டா இதெல்லாம் விட்டுப்போட்டுபள்ளிக்குப் போய் படி...

மகன் : சும்மாபடிபடிஎண்டுசொல்லாம... காசுசம்பாதிக்கிறவழியச் சொல்லுங்க... என்னோட 6ம் வகுப்புபடிச்சவன் அப்பவேபள்ளியவிட்டுப்போட்டுவேலைக்குபோறான். கையிலபோண் என்ன... ஜாலியாதிரிகிறான்...நானும் எனக்கொருபோன் வாங்கனும் எண்டிருக்கன் நீ... வேற... அம்மா... Time is money, money is timeதெரியுமா?

அப்பா: அப்படிசொல்லுடாஎன்டசெல்லபிள்ள... ஏண்டிநீஅம்மாஅவனைப்படிபடி எண்டுஉயிரவாங்கிரா... அவன் வேலைக்குப் போகட்டும். நீஅவன்டமனசமாத்தாத... நீவேலைக்குப் போடாமகனே... ஆன என்னையும் ஒவ்வொருநாளும் கொஞ்சம் கவனிச்சுக்கோ.

மகன் : இனிநான் பள்ளிக்கெல்லாம் போகமாட்டன்... வேலை செய்து காசிதேடறது தான் என்றஎண்ணம் நான் போய் வாறன்.

அம்மா : ஐயோகடவுளேபிள்ளைகளுக்குநல்வழிகாட்டிவளக்கிறதா... சின்ன வயசிலே இப்படிகெட்டுப்போகவிடுறதா... இப்படிஒவ்வொருகுடும்பத்திலும் நடந்தாபிள்ளைகளின்டஎதிர்காலம் எப்படிபோகும்... கடவுளே.

எடுத்துரைஞ்ஞர் : பார்த்தீர்களா இந்தக் குடும்பத்திலநடக்கிறத... பிள்ளைகள் கல்வியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடராமல் இடையில் விலகிநிற்ககாரணம் யார் என்று... கடன் சுமைக்காக சின்னவயதில் வேலைக்குசெல்லவைப்பதால் அந்தசின்னஞ்சிறுமகன்தன் வாழ்க்கையைகேள்விக் குறியாக்கிவிடுகின்றார்களே... இன்று நம் சமுதாயத்தில் காணப்படும் பெரும் சீரளிவு இது தானுங்க... சிறுவயதில் கல்வியைவிட்டுவிடுபவர்கள் தங்கள் கூட்டாளிகளுடன் கூடி கெட்டழிவதும்,தமதுவாழ்க்கைக் காலத்தில் சீரழிவதும் யாராலபெரும்பாலும் பெற்றோரேகாரணமாகின்றனர். இப்படியானசெயல்களைநிறுத்தவேண்டாமா? பிள்ளைகள் முழுமையானகல்விஅறிவைப் பெறநாம் துணைநிற்கவேண்டும். நம்மால் முடியாவிடினும் பிறர் தயவைப் பெற்றுகல்விபுகட்டுவது நம் கடமை இல்லையா... பாடசாலை இடைவிலகலை இல்லாமல் செய்வோம். இனிஎன்றாலும் எம் பிள்ளைகளுக்குஅழியாச் செல்வமானகல்வியைக் கொடுக்கமுன்வருவோம்.

## காட்சி - 02

எடுத்துரைஞ்ஞர் : பாடசாலைசெல்லவேண்டியபருவத்தில் பாடசாலையை இடைவிலகிச் செல்லகாரணமானஒருகுடும்பத்தைக் கண்ட நாம் இதோமற்றொருகுடும்பத்தின் செயலைக் காணஓடிவாங்க.

சுஜா : பவித்திரா... ஏய் பவித்திரா... என்னடிகொஞ்சநாளா ஸ்கூல் காணல்ல... கிளாசுக்கும் காணல்ல... ரீச்சரும் ஏன் எண்டுகேட்டவ

பவித்திரா : என்னத்தசொல்ல சுஜா... எனக்கு ஸ்கூளுக்குவரவிருப்பமே இல்ல. இனிநாமஎங்கபடிக்கப்போறம் எல்லாம் எங்கடதலைவிதி... இனிநான் கொஸ்டல்லதான் இருக்கப் போறன். சித்திகொண்டுபோய் சேத்துவிடுறன் என்றுசொன்னா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சுஜா : என்னகொஸ்டல்லயா... என்னடிதிடீர் எண்டு... உங்கடஅப்பாவுக்கு தெரியுமா? ஏன் இப்படிஒருமுடிவுஎடுத்தநீ...

பவித்திரா : அம்மா... அப்பா இருந்தாதானே... அவங்கரெண்டுபேரும் வேற வாழ்க்கைதேடிபோயிட்டாங்க...

சுஜா : என்னடிசொல்லுற...

பவித்திரா : அம்மாவிற்குஅப்பாஒருபோன் வாங்கிகொடுத்தார் அதோடவந்தது நாசம் அதற்குப் பிறகுதொடங்கினசண்டைதான். இரண்டுபேரும் ஒருவரஒருவர் சந்தேகப்படத் தொடங்கிஏற்பட்டுச்சிசண்டைபிறகுபாத்தாஅம்மாதெரியாமஅப்பாக டன் வாங்கிகொடுத்திருக்கார்... அப்பாவுக்குதெரியாமஅம்மாகடன் வாங்கியாருககோகொடுத்திருக்காவாம். இதாலசண்டைபெரிதாகிரெண்டுபேரும் வேறவேறவாழ்க்கைதுணையதேடிபோயிட்டாங்க... என்னப் பத்தியாரும் கவலைப்படல்ல. இப்பநான் சித்திவீட்டிலதான் இருக்கன்...

சுஜா : இந்தக் காலத்திலயும் இப்படி இருக்கிறாங்கதானே... உன்னோடஎதிர்காலத்த நினைத்தாலும் இருவரும் உன்னோட இருந்திருக்கலாம். குடும்பத்திலசந்தேகம் ஒன்றுவந்தாஅதஎப்படிதெளிவாக்கிற. அது இருந்துஎப்படிவிடுபடுறஎன்றுதான் பார்க்கவேண்டும். கடன்படும் போதுஅதஎப்படிஅடைக்கிறஎன்றவழியத்தான் யோசிக்கவேணும். கடன்பட்டுபோட்டுஅதாலசண்டைபிடிக்கிற... ஊர விட்டுஓடிப்போய் இருக்கிறஅல்லாட்டிநஞ்சுகுடிச்சுசாகிற இதெல்லாம் தீர்வா... என்னவாழ்க்கை இது வாழத்தெரியாதவர்கள் செய்றவேலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பவித்திரா : நீசொல்லுறதுசரிதான் சுஜா. இனிமுடிந்தவிசயத்தப்பற்றிகதைச்சி பிரயோசனம் இல்ல... நானும் கூடியகெதியாகொஸ்டல்லசேந்திடுவன். அதுக்குப்பிறகுபடிக்கிறதா இல்லையாஎண்டுயோசிப்பம்.

(இருவரும் செல்தல்)

எடுத்துரைஞ்ஞர் : பார்த்தீர்களா... குடும்பங்களில் இப்படியானசம்பவங்களும் நடக்கிறதுதானே... பிள்ளைகளோடதாய் தகப்பன் இல்லாதுபோனால் பிள்ளையின் நிலைஎன்னவென்றுவாழ்க்கையில் இதுபோல் எத்தனைகுடும்பங்களைநாம் காணலாம். சந்தேகக்கோடு... அதுசந்தோசக்கேடுஎன்றுஅறிஞர் பாடியுள்ளார்கள். குடும்பங்களில் கடன்சுமை,சீட்டுப்பிரச்சினை... செல்போன் பிரச்சினைஎன்றுஎத்தனைஎத்தனை... அதுமட்டுமா... கணவனுக்குதெரியாமமனைவிசெயல்படுவதும்,மனைவிக்குதெரியாமகணவன்செயல்படுவதும் வீணாககுடும்பங்களில் பிரச்சினைக்குகாரணமாகிவிடுகின்றது... தங்கள் பிரச்சினைக்குதீர்வாகபிரிந்துவாழ்வதுஒருதீர்வாஅப்படிஎன்றால் பிள்ளைகளின் நிலை?

கணவனும் மனைவியும் அன்பாக,விட்டுக்கொடுத்துஏற்றுக்கொண்டுவாழவேண்டும். சந்தேகத்தைக் கருவியாக்கிகாலம் காலமாகபிரிந்துவாழ்தல் விட்டுப்போட்டுஓடிப்போதல் தீர்வாகாது. இனிஎன்றாலும் புரிந்துகொள்வோம். சந்தேகங்களைகளைந்துவரவிற்கேற்பவாழ்ந்துநமதுகுழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாகஅமையநாம் வழி அமைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காட்சி– 03

## (அம்மா,மகன்,மகள்,பெரியம்மா...)

எடுத்துரைஞ்ஞர் : வீட்டில் அப்பா,அம்மாபிரிவால் பிள்ளைக்குஏற்பட்டஅவல நிலையைக் கண்டஉங்களுக்குவீட்டில் பிள்ளைகளுடன்,தாய் அல்லதுதந்தை இல்லாவிட்டால் அதிலும் தாய் பிள்ளைகளுடன் இல்லாவிட்டால் பிள்ளைகள் படும் கஸ்டங்களைஅநீதிகளையும் அண்டிவாழச் செல்லும் இடத்தில் பிள்ளைகள் படும் அவலங்களையும் அதனால் அப்பிள்ளைகளின் மனங்களில் உண்டாகும் எண்ணங்களையும் வெளிநாடுசெல்லும் தாய்மாரினால் தன் பிள்ளைகளும் கணவன்மாரும் படும் அவலநிலையையும் பற்றிக் காணநாமும் செல்வோமா... வாருங்கள் வந்துபாருங்கள்

மகன் : அம்மா... அம்மா... இந்தஅம்மாஎங்கதான் போனாவோதெரியல்லஎவ்வளவுநேரமா... தேடுறன்.

மகள் : கவிதாஅம்மாவப் பாத்தயா... ஒரு இடத்தையும் காணல்லயே... ஸ்கூளுக்குப் போகநேரமாகுது...

அம்மா : என்னரெண்டுபேரும் ஸ்கூளுக்குப் போகாமகதைத்துக் கொண்டுநிக்கிறீங்க சீக்கிரம் றெடியாகுங்க...

மகள் : நாங்கள் எப்பையோறெடியாகிட்டம் அம்மா... உங்களிட்டசெல்லி போகத்தான் எவ்வளவோநேரமா கூப்பிடுறம்... எங்கபோயிட்டுவாரீங்க...

அம்மா :அதுவாநான் வெளிநாடுபோகபோம் நிரப்பஏஜென்சிவந்தவர் அதுதான் போயிட்டுவந்தன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மகன் : என்னம்மாவெளிநாடுபோகப் போறீங்களா... போகாதீங்கம்மா... போனா எங்களயாருபாத்துக்குவாங்க... போகாதீங்கம்மா...
(மகனும் மகளும் போகவேண்டாம் என்றுஅழுதல்)

அம்மா : அழாதீங்க இப்படிரெண்டுபேரும் அழுதுஎந்தப் பிரயோசனமும் இல்ல...
உங்கப்பா... கண்மூடித்தனமாகடனப்பட்டுப் போட்டு... இப்பநம்மலாம் வெறுத்துஒதுக்கிவிட்டுப்போட்டுயாரோடயோவாழ்கிறார். ஆனாகடன் கொடுத்தவங்கநம்மலநிம்மதியாவாழவிடுறாங்களா... நம் கஸ்டமும் அவமானமும் எனக்குத்தான் தெரியும். தினம் தினம் காலையில சூரிய உதயத்தைக் காணறனோ இல்லையோ. கடன் கொடுத்தவங்கடமுகத்திலதானேமுழிக்கிறன்.
இப்படிஒருகேவலமானவாழ்க்கைவாழ்வதைவிடசாகலாம் எண்டா... நீங்கரெண்டுபேரும் அநாதையாகப் போய்விடுவீங்கஅதாலஎன்ன கஸ்டப் பட்டாலும் இக் கடனை அடைக்கவேண்டும். நீங்கரெண்டுபேரும் இதப்பத்தியோசிக்காம... பள்ளிக் கூடம் போங்க... படிக்கணும்...
(பிள்ளைகள் செல்லல்)

(அம்மாசரசுஅக்காவீட்டிற்குச் செல்லல்)

அம்மா : அக்கா... அக்கா... சரசுஅக்கா...

சரசு : வா... மாலா... வா... பிள்ளைகளையும் கூட்டிட்டேவந்திட்டயா... பிள்ளைகளா...வாங்க...

அம்மா :அக்காநான் முதல்லேஉங்களிட்டஎல்லாத்தையும் சொல்லிட்டன் இப் பிள்ளைகளைவிட்டுப்போட்டுபோகத்தான்வந்தநான்.
இன்டைக்கேபோகபோறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சரசு : நீஓண்டுக்கும் கவலப்படாதஉன்டவீட்டிலஉன்னோடபிள்ளைகள்எப்படி இருந்தாங்களோஅப்படி இங்கயும் சந்தோசமாகவைப்பதுஎன் பொறுப்பு... நீதிரும்பிவாறவரைக்கும் ரெண்டுபேரையும் நான் கவனமாகப் பாத்துக் கொள்ளுவன்.

அம்மா : மகன் தங்கச்சியபத்திரமாபாத்துக்கோ... பெரியம்மாசொல்லுறதகேட்டு நட

அம்மாகடன் எல்லாத்தையும் கொடுக்கமட்டும் இருந்துவேலைசெய்துபோட்டுவந்திடுவன்... அக்காநான் உங்களுக்குத் தான் காசல்லாம் அனுப்புவன் கடன் காறனுகளுக்குகடன் எல்லாத்தையும் கொடுத்திடுங்க... பிறகுவந்துவசதியாகஎண்டபிள்ளைகளோடவாழனும்... நான் போய் வாறன்...

எடுத்துரைஞ்ஞர் : மாதங்கள் கடந்துவருடங்கள் பிறக்கிறதுவெளிநாடுசென்றதாய் கடன்களைஅடைத்தாளா... அடைக்கலம் கொடுத்தபிள்ளைகயள் சீராகவும் சிறப்பாகவும் வளர்க்கப்படுகிறதா... என்னநடக்கிறதுஎன்றுகாணஆவலாக இருக்கின்றீர்களா... வாங்கபாப்பம்...

சரசு : டேய் பள்ளிக்கெல்லாம் போகத்தேவையில்லஎன்னபொல்லாதபடிப்புதோட்டத்திலநிறையவேலைகிடக்கு... இந்தா இந்தபழஞ்சோத்ததிண்டுபோட்டுபோடாபோய் தோட்டத்திலவேலசெய். ஆ... வாம்மாமகாராணிநீஎங்கபோப்புறா... படிச்சுகிளிச்சதெல்லாம் போதும்... குசினிக்குள்ளராத்திரிசாப்பாட்டசாமான் எல்லாம் கழுவாமக்கிடக்குபோய் கழுவுபெரியம்மா...

மகன் :எங்களுக்குவாறகிழமை ரெஸ்ட் வருகுதுபெரியம்மா... பள்ளிக்குபோகாட்டி...

சரசு :போகாட்டி... என்னகொண்டுகொழுவிவிடுவாங்களா... அவங்களுக்குஎன்னதெரியும்... இஞ்சதெண்டச் சோத்துக்குகிடக்கிறது. அப்பன் குடிகாறன் குடிச்சுக்குடிச்சுஅழிச்சதுமட்டுமல்லகழுத்தளவுகடனப்பட்டுப்போட்டுசொல்லாமகொள்ளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மழெடிற்றான். அம்மாக்காறிவெளிநாட்டுமோகம் புடிச்சுகடன்காறன் எண்டு... போயிட்டாள்...திரும்பிவருவாளாஅல்லதுஅவளும் ஓடிப்போயிடுவாளோ... தண்டத்துக்குகிடக்கிறஉங்களுக்குஒருபுதுனமானபடிப்பு... போடாபோய் தோட்டத்திலவேலைசெய்... இல்லாட்டி இன்னைக்குசோறு இல்ல...

எடுத்துரைஞ்ஞர் :பார்த்தீங்களா இப்பிள்ளைகள் படும்பாட்டஅளவுக்கதிகமாககடன்பட்டா இது தான்நிலை... கடன்பட்டுவாழும் போதுசுகபோகவாழ்க்கையாகத் தான் இருக்கும். ஆனால் கடன இறுக்கும் போதுதான் கஸ்டங்கள் வாழ்க்கையைக் கடிக்கத் தொடங்கும். கடனுக்காகமனைவிவெளிநாடுபோறதுஅல்லதுகணவன் குடும்பத்தவிட்டுஓடிப்போறதுதீர்வு இல்லங்க... தாய் இல்லாதவீடு... வீடுஅல்லஅது பேய் வாழும் சுடுகாடு... தாய் வெளிநாடுபோனால் பிள்ளைகளின் நிலையைப் பார்த்தீர்களா? கஸ்டம் மட்டுமல்லஅவர்களின் வாழ்க்கையும் தடுமாறிபோய்விடுகிறது. இதுதான் பெற்றவர்கள் பிள்ளைகளுக்குசெய்யும் சிறப்பா... சிந்திப்போம் சிறப்புடன் வாழ வழி அமைப்போம்.

## காட்சி- 04

## (சுஜா,பவித்திரா,கவிதா,பாடசாலைக்குச் செல்லல்)

எடுத்துரைஞ்ஞர் : என்னங்க... வீட்டுக்குவீடுவாசற்படிஎன்றாப் போலஒவ்வொரு வீட்டிலயும் ஏதோஒருபிரச்சினைதலைவிரித்தாடுது. அதிலநாமளும் அகப்பட்டுஆடிக்கிட்டு இருக்கோம் எண்டுதானேயோசிக்றீங்க... சரிவீட்டிலதான் அப்படிஎண்டா. றோட்டிலஎன்னநடக்கிறதென்றுகொஞ்சம் பாருங்கபெற்றோரே...

சுரேஸ் : டேய் மச்சான் வாழ்க்கையேஒருஅணிசியா இருக்கடா... உனக்கென்னநீ எந்தநாளும் படிப்புபடிப்புஎண்டுதான் இருக்கா... Examமுடியட்டும் என்னநடக்குதெண்டுபாப்பம்.

மாதவன் : அம்மா... போடாஉனக்குவேறவேலையில்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சுரேஸ் : அங்கபாருடாதிறிறோசஸ் வாராங்க... நடுவிலவாறதுஎண்டஆள்... நானும் எவ்வளவுரைபண்ணிப்பாக்கன் முடியல்லடா... பேசிக் கொடுக்கலாம் எண்டுகிட்டப் போனா... அண்ணாஎண்டு கூப்பிடுறாளுடா...

அந்தப் புள்ளசரியாத்தான் சொல்லிருக்குஉனக்குஒண்டா,ரெண்டாபோறவாறபுள்ளயளப் பார்த்துஎண்டஆள்... எண்டஆள் என்றாஉனக்குவேறவேலையே இல்லையாடா.

இந்தக் காலத்திலயாருதான் இப்படி இல்ல... சொல்லு. அத... அதஅந்தந்தவயசிலஅனுபவிக்கணும் மச்சான்... டேய்... டேய் மறைஞ்சுவாடா... எண்டபெரியப்பாவாரார்ரா... என்னப் பார்த்தார் எண்டா. ஆயிரத்தெட்டுக் கேள்விகேப்பார்... வாடாபோய்திடுவம்.

## காட்சி– 05

உறுப்பினர் 1 : என்னடா... நீஎன்னன்னவோஊருக்குள்ளநடக்கிறகதைஎல்லாம் எண்டுசொன்னாஎன்னத்தப்பத்திபேசுற...

உறுப்பினர் 2 : நம்மடமாலாஅக்காலத் தெரியும் தானே புரசன் பட்டகடன் அடைக்க எண்டுவெளிநாடுபோய்ராவாம். நல்லாபடிச்சுவந்தஅவடபுள்ளயல் இப்பபள்ளிக்கேபோறல்லயாம் தோட்டத்திலபொடியன் வேலைசெய்றானாம். பெண்கள் வெளிநாடுபோறதுதான் வாழ்க்கையிலவாறபிரச்சினைக்குதீர்வுஎண்டா. இங்கபிள்ளைகள் படும் கஸ்டத்திற்குதீர்வுகாண்றதுயாரு...

உறுப்பினர் 1 : அட இது மட்டுமா... நம்மளோடபடிச்சானேபார்வதிஅக்காவோட மகன் 9ம் வகுப்பிலே ஸ்கூள இடையிலவிட்டுப்போட்டு இப்பவேலைக்குப் போறானாம் காசாசைபிடிச்சுபடிப்ப இடையிலவிட்டுப்போட்டானாம். படிக்கவேண்டியவயசிலபடிக்காம... இதுகளுக்கெல்லாம் ஒருதீர்வு இல்லையாடா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உறுப்பினர் 2 : அட இதுகளவிடு... இந்தபவித்திராடகதையக் கேட்டாகண்ணே கலங்குதுடா... பாவம் நல்லாபடிச்சுவந்தவனள் இப்பபள்ளிக்கேவாறல்லடாஅவள்றஅப்பாவும் அம்மாவும் சந்தேகப்பட்டுபிரிந்துவேறவேறகலியாணம் பண்ணிட்டாங்களாம். இவளநடுறோட்டிலவிட்டமாதிரி...

உறுப்பினர் 1: அட நீஅதச் சொல்லுறா இந்தறோட்டிலபொடியனுகள் இந்தப் பொம்புளப் புள்ளயளப்படுத்துறபாட்டச்சொன்னாதாங்கமாட்டா... எவ்வளவுநக்கலும் கிண்டலும்... சைக்கிளாலதட்டுறதும் ஆட்டோவாலஉரஞ்சிறதும் கடிதம் எழுதிமுன்னாலபோடுறதும்... பின்னாலநக்கலாபாட்டுபடிச்சுப்போறதும்... ஐயோஅதுகள் பாவம்டா... இதெல்லாம் யாருட்டபோய் சொல்லுற.

உறுப்பினர் 2 : என்னடாநீ... இப்படிகவலைப்படுறா... நம்மடசிறுவர் கழக கூட்டத்திற்குவாறாங்களே. சிறுவர் மட்டஅபிவிருத்திஉத்தியோகத்தர்கள்,அவர்களிட்டசொன்னாஅவங் க இதற்குப் பொறுப்பானஅமைப்புக்கள்,சிறுவர் பராமரிப்புபொலிஸ் பிரிவு இவங்கள்டசொல்லிதீர்வுபெற்றுத் தருவாங்கசரிவாபோவம்.

எடுத்துரைஞ்ஞர் : பார்த்தீர்களாநம்மடசமுதாயத்திலநடக்கிறபிரச்சினைகளை இதற்கெல்லாம் யார் காரணம்... பாடசாலைபடிப்பை இடையிலவிட்டுவேலைதேடிஊரச்சுற்றித் திரிகிறவங்க... கெட்டபழக்கவழக்கங்களுக்குஅடிமைகளாகிசீரழிந்துபோறவங்க... பெண்கள் வெளிநாட்டுமோகத்திலபோய் தானும் நன்றாய் வாழாமபிள்ளைகளையும் அக்கறையோடுவளர்க்கிறதில்ல... குடும்பபிரச்சினைகள்,கடன் தொல்லைகளுக்குகுடும்பத்தவிட்டுபெற்றோர் பிரிந்துவாழ்தல்,பெண்கள் வெளிநாடுசெல்தல். பாடசாலையை இடையில் விட்டுவிலகுதல்,பிள்ளைகளைதத்துக்கொடுத்தல் குழந்தைகாப்பகங்களில் விடுதல் ஒருதீர்வாகஅமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிந்திப்போம் சிறப்பாகசெயல்பட்டு இவருடன் வாழமுயல்வோம். இனிஎன்றாலும் புரிந்துகொள்வோம். சந்தேகங்களைகளைந்து,கடன் சுமைகள் ஏற்படுவதைதவிர்த்து'விரலுக்கேற்றவீக்கம்'என்பதுபோல் நமக்கேற்றவாழ்க்கையைவாழப் பழகுவோம். நம் குழந்தைகளின் எதிர்காலம் சிறப்புறமாறநாம் வழி அமைப்போம்... செயல்படுவோம்.

## முடிவுப்பாடல்

சாஸ்திரம் பேசவில்லை–நாங்கள்
யாரையும் ஏசவில்லை
உண்மையைஎடுத்துரைத்தோம் - நாங்கள்
உண்மையைஎடுத்துரைத்தோம்

வேதனையாருக்கில்லை
சோதனைஎவருக்கில்லை
சாதனைசெய்தவரும் - பின் வேதனைஅடைந்தவரே

சாஸ்திரம் பேசவில்லை–நாங்கள்
யாரையும் ஏசவில்லை
உண்மையைஎடுத்துரைத்தோம் - நாங்கள்
உண்மையைஎடுத்துரைத்தோம்.

**கோ.ருத்திர ருப ரஞ்ஜனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சமூகத்தில் பெண்களும் சிறார்களும் அதிகம் பாதிப்படைகின்றனர்

பெண்களும், சிறார்களும் மென்மையானவர்களாகவும் ,வலிமையற்றவர்களாகவும் ,அழகானதோற்றத்திலும் இயற்கையில் படைக்கப்பட்டடுள்ளனர் இவர்கள் இலகுவில் ஏமாற்றப்படக்கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். பெண்ணானவள் மகளாக,சகோதரியாக,மனைவியாக,தாயாகபலபாத்திரங்களைஏற்றுநடக்கக்கூடியவளாகவும் காணப்படுகின்றாள். தாய் பாசத்தைஎந்தஅளவுகோலாலும் அளவிடமுடியாது. கருவொன்றைகருவறையில் சுமக்கத்தொடங்கும் நாள் முதல் அதனைசுமுகமாகபிரசவிக்கும் நாள் வரைஅத்தாய் படும் வேதனைகள் ஏராளம். பிரசவநாள் என்பதுமரணத்தின் வாசலைதொட்டுவிட்டு மறு பிறவிஎடுக்கும் ஒருநாள் போற்றிபாதுகாக்கப்படவேண்டியபெண்ணாணவள் சமூகத்தில் ஒருமுக்கியபாத்திரமாகும். ஒருநாட்டின் முக்கியமானசெல்வங்களாககணிக்கப்படுபவர்களில் பெண்களும்,சிறுவர்களும் அடங்குவர். இன்றயசிறார்கள் தான் நாளையஉலகின் தலைவர்கள்.எனவே இப்படியானசிறார்களைபேயணிப்பாதுகாப்பதுஉரியமுறையில் வழிநடத்திநாட்டின் நற்பிரஜைகளாகமாற்றுவது நம் எல்லோரினதும் முக்கியகடமையாகும். முதலில் சிரார்கள் என்றால் யார் என்பதைநாம் புரிந்துகொள்ளவேண்டும் ஐக்கியநாடுகளின் தாபனத்தின் பட்டயத்தின் ஏற்பாடுகளின் படி 18 வயதுக்குட்பட்டஎல்லோரும் சிறுவர்களாககருதப்படுவார்கள் இது எமது இலங்கைசட்டத்திலிருந்துசற்றுவித்தியாசமானதுஅதாவது 1956ம் ஆண்டுகொண்டுவரப்பட்டபெண்கள் இளம் பிராயத்தினர் மற்றும் சிறுவர்களைவேலைக்கமரத்துதல் சட்டத்தின் படி 14 வயதுக்குட்பட்டஎல்லோரும் சிறுவர்களாககருதப்படுவார்கள்.

மேலும் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக சமூகத்தில் இன்றுமனிதாபிமானம் மரணித்துவிட்டசெயல்கள் பலஅரங்கேரிவருகிறது.பாலியல் வக்கிரத்திற்கு இறையாகும் சிறுவர்கள் பற்றி நாம் அறிகின்றோம். சிறுவர் துஷ்பிரயோகம் என்பதுசிறுவர்களைதவறாகவழிநடத்தும் அனைத்துவிததவறுகளையும் குறிக்கும். உறவுகளதுமகத்துவம் அறியாதுமகள் தந்தையாலும் ,பேத்திபாட்டனாலும் ,மாணவர்கள் அதிபர்கள்,ஆசிரியர்களாலும் வேலியேபயிரைமேய்வதாகவும் இனம் தெரியாதநபர்களாலும் நெருங்கியஉறவினர்களாலும் துஷ்பிரயோகத்திற்குஉள்ளாக்கப்படுகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெண்களும் சிறுவர்களும் இன்றுபலவிதமானவர்களினாலும் உடல், உள ரீதியானபாதிப்புக்குள்ளாக்கப்பட்டுஇருப்பதனை அறியமுடிகின்றது. பாடசாலைகளில்,வீடுகளில்,சுற்றாடலில்,காரியாலயங்களில்,வேலைசெய்யும் இடங்களிலும் பலவிதமானதாக்குதலுக்கும் ,வன்முறைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். சமூகத்தில் பெண்களும் சிறுவர்களும் இவ்வாறாகபாதிக்கப்படுவதால் சமூகத்தில் பலவிதமானபிரச்சினைகளும் பாதிப்புக்களும் ஏற்படுகின்றன.பெண்களும் சிறுவர்களும் இவ்வாறுஉடல் ரீதியாகபாதிக்கப்படும் போதுஇவர்கள் மனவிரக்தியடைந்துதற்கொலைசெய்யும் சம்பவங்கள்அதிகரித்துள்ளது. இதனால் விலைமதிக்கமுடியாதமனிதஉயிர்கள் இழக்கப்படுகின்றன. மேலும் தவறான நடத்தைகளால் நெறிதவறிபிறந்தகுழந்தைகள் வீதியோரத்தில்விடப்படுவதனால் அனாதையாக்கப்படுகிறார்கள் இவர்கள் தீயவர்களின் கைகளில் அகப்பட்டுவிபச்சாரம்,கொலை,பிச்சையெடுத்தல் போன்றபஞ்சமாபாதகங்களுக்குபயன்படுத்தப்படுகிறார்கள். இதனால் சிறுவர் குற்றவாளிகள் அதிகரிக்கின்றனர்.இலஞ்சம்,வறுமைசமூகத்தில் தாண்டவமாடுகிறது.மேலும் போதைவஸ்துக்குஅடிமையாதல்,மாணவர்கள் கல்வியில் நாட்டமின்மை,அச்சஉணர்வுபாடசாலையைவிட்டுவிலகுதல் போன்றனவும் அதிகரிக்கின்றன

மேலும் தவறானநடவடிக்கையால் பாலியல் நோய்களானஎயிட்ஸ்,மேகநோயாளிகள் அதிகரித்துள்ளனர். இவ்வாறான துர் நடத்தைகளால் சமூகவிழுமியங்கள் பாதிக்கப் படுகின்றதுடன் பொருளாதாரவீழச்சியும் வேலையில்லாதிண்டாட்டமும் ஏற்பட்டுநாடுஅதளபாதாளத்திற்குசென்றுகொண்டிருப்பதைஅவதானிக்க கூடியதாகஉள்ளது.இன்றுசிறைச்சாலைகள் நிரம்பிவழிவதைகாணக்கூடியதாகஉள்ளது.மனித நேயம்,மனிதாபிமானம் முழுமையாகஅகற்றப்பட்டுள்ளது. மக்களிடையேகுரோதம்,அச்சஉணர்வு, பயம்,தாழ்வுமனபான்மை,பகையுணர்வு போன்றவற்றையே காணக்கூடியதாகஉள்ளன. பெண்கள் ,சிறுவர்களின் உரிமைகளும் சுதந்திரங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இன்றுபாடசாலைகள் ஆபத்தான இடமாகமாறிவருகின்றன. மிகஅன்மையில் மாறவிலயில் அதிபர் ஒருவர் 5 பிள்ளைகளைபாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். உடுதும்பரபகுதியில் உப அதிபர் 13,15 வயதுடைய இரு மாணவிகளைபாலியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சம்மந்தமானபடத்தைக்காட்டிபாலியல் வன்முறையில் ஈடுபட்டமைக்காக கைதுசெய்யப்பட்டுள்ளார். இப்படியாகபலசம்பவங்கள் நடைபெறுவதை அன்றாடபத்திரிக்கையில் நாம் காணக்கூடியதாகஉள்ளது. இதுபோன்றசம்பவங்களால் பிள்ளைகளைபெற்றோர்கள் பாடசாலைக்குஅனுப்புவதற்கு அஞ்சக்கூடியதாகவும்மாணவர்கள் பாடசாலையைவெறுக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் இதனால் கல்வியை இடைநிறுத்தியவர்களும் ஏராளம். ஒழுக்கத்தைபோதிக்கும் ஆசிரியர்களேஒழுக்கயீனமாகநடக்கும் போதுமற்றயவர்களைகேட்கவேண்டுமா. இப்படி இடைவிலகும் மாணவர்களின் எதிர் கால இலட்சியம் சூனியமாக்கப்பட்டுதான்தோன்றித்தனமாகவழிதவறப்பட்டுகெட்டவர்களின் வயைில் சிக்கிசீரழிவதைகாணக்கூடியதாகஉள்ளது.

எனவே இப்படியாகநடைபெறும் செயலுக்குயார் காரணம் அவற்றைஎவ்வாறுதடுக்கலாம் சட்டத்தில் குற்றமிழைத்தவருக்குதண்டணைஎவ்வாறுபெற்றுகொடுக்கலாம் என்றவிழிப்புணர்வைஏற்படுத்துவது இன்றயஎம் சமூகத்தில் அத்தியாவசியமானதேவையாகவும் உள்ளது.

A.Cஅன்வர் சதாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அறிவைதேடும் நூலகம்

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" இவ்விரண்டையும் நமக்குஅளிக்கும் கருவி நூல்கள் ஆகும். ஆப்படிப்பட்ட நூல்கள் தொகுத்துவைக்கும் இடமே நூல்நிலையம் ஆகும். ஆவ் நூல் நிலையங்கள் புத்தகசாலை,ஏடகம்,சுவடியகம்,படிப்பகம்,பண்டாரம், வாசிகசாலைஎனபலபெயர்களால் அழைக்கப்படுகின்றன.

நூல்நிலையங்கள் இன்றுநேற்றுஏற்பட்டவைஅல்ல. பல நூறு ஆண்டுகளுக்குமுன்பேநூல்நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முனிதன் என்று கழித்தட்டுக்களில் எழுதத்தொடங்கினானோஅன்று முதல் நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டதுஎனலாம்.

புனிதமுற்று புது வாழ்வுவேண்டில்புத்தகசாலைசெல்லவேண்டும் என்றார் - பாரதிதாசன் எனக்குப் பிடித்த நூல்களுடன் வாழ்நகள் முழுவதும் சிறையில் இருப்பேன் என்றார் - நேரு,

புத்தகங்கள் மருந்துகளைபோன்றே மூடத்தனம் என்கின்றநோயைமுற்றாகவிரட்டும் மூலிகைமருந்துகள் அவைஎன்று கூறுகிறதுசீனபழமொழிஎன நூலகத்தின் முக்கியத்துவத்தைஅறிஞர் வரையறுத்துள்ளார் எம் இலங்கைதிருநாட்டில் பலவகையான நூலகங்கள் காணப்படுகின்றன.

1) தேசியநூலகம்
2) பொதுநூலகம்
3) பல்கலைகழக நூலகம்
4) பாடசாலைநூலகம்
5) கல்லூரி நூலகம்
6) விசேட நூலகம்

எனபலநூலகங்கள் காணப்பகின்றன.

இவ்நூல்கள் மனிதனுக்குஅன்றாடவாழ்வில் பலசேவைகளைசெய்கின்றன.

- ✓ உசாத்துணைசேவை
- ✓ சமூகத்தகவல் சேவை
- ✓ இலத்திரனியல் சேவை
- ✓ சமகாலவிழிப்புணர்வுசேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- ✓ தேர்ந்தெடுக்கப்பட்டதகவற்சேவை
- ✓ விரிவாக்கல் சேவைகள்

இச்சேவைகளைதிறன்படநடாத்தசிறுவர் பிரிவு, இரவல் பிரிவு,பத்திரிக்கைபிரிவு,உசாத்துணைபிரிவுஎனபலபிரிவுகளில் நூலகத்தந்தை S.R.ரங்கநாதனின் அனைவருக்கும் நூலகம் எனும் வகையில் பொது நூலகங்கள் சேவையாற்றிவருகின்றன.

நாம் நூலகத்திற்குசெல்லும் போதுஎப்போதும் அமைதியாகசென்றுபடிக்கவேண்டும். அங்குபுத்தகங்கள் துறைவாரியாகஅடுக்கிவைக்கப்பட்டிருக்கும் நூலைகிழித்தலோ,சேதப்படுத்தலோசெய்தல் கூடாது. படித்துமுடித்ததும் நூலகத்தின் கோட்பாட்டிற்குஉட்பட்டு நூல்களைமேசையில் வைத்துவிட்டுவருவதுசாலசிறந்தது. இடம் மாற்றி வைக்கும் புத்தகங்கள் எனைய வாசகர்களுக்கு தகவலை விரைவாக பெற்றுக்கொள்ளவதில் தாமதத்தினை ஏற்படுத்தக் கூடும்.

இன்றுபலஅறிஞர்களும் நூலகம் சென்று நூல்களைபடித்ததனாலேதான் சிறந்தஆராய்ச்சியாளர்களாகவும்,மாமேதைகளாகவும்,விஞ்ஞானிகளாகவும் மாறியுள்ளனர். காந்திபோன்றோர் பல நூல்களைபடித்ததன் காரணத்தினால்தான் இன்றுமகாத்மாவாகபோற்றப்படுகின்றார். இன்றுமனிதநேயம் குறைந்துவிட்டதுமனிதநேயம் தலை தூக்க நூலகம் செல்வோம் நூல்கள் பலகற்போம்.

**சி.வக்சிகா**

**மட்டக்களப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## The Power of Storytelling: The Impact of Reading Fiction

From ancient campfire tales to modern-day blockbusters, stories have always held a powerful place in human society. Fiction, with its ability to transport us to different worlds and immerse us in the lives of imagined characters, offers a unique and profound impact on our lives.

One of the most significant ways fiction impacts us is by fostering empathy. When we step into the shoes of a fictional character, we experience their joys, sorrows, triumphs, and struggles. This vicarious experience allows us to understand the human condition from a broader perspective, cultivating compassion and tolerance towards others.

Reading fiction is not just entertainment; it's a workout for our minds. As we navigate complex plots, analyze characters' motivations, and decipher hidden meanings, our cognitive abilities are sharpened. Studies have shown that fiction readers often exhibit enhanced critical thinking skills, improved memory, and increased creativity.

Fiction provides a safe space for us to explore our emotions and grapple with complex issues. By confronting the fears, desires, and vulnerabilities of fictional characters, we can gain insights into our own psyche. Fiction can also serve as a cathartic experience, allowing us to process our emotions and find solace in shared human experiences.

Fiction offers a window into different cultures, time periods, and social realities. Through the lens of narrative, we can learn about historical events, explore diverse perspectives, and gain a deeper appreciation for the richness of human experience.

The power of storytelling through fiction is undeniable. It enriches our lives, expands our horizons, and shapes us into more empathetic, understanding, and well-rounded individuals. As we continue to immerse ourselves in the worlds of imagination, we unlock the transformative potential of fiction.

**Miss. SakeelaSivakumar**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நூலகம் ஒன்றில் நூலகரின் வகிபாகங்கள்

அறிவியல் உலகின் அத்தியாவசியமானதேவைகளில்ஒன்றாக விளங்குபவை நூலகங்களாகும். அறிவுப்பசி கொண்டோரை நூலகத்தின்பால் கவர்ந்து ஆற்றுப்படுத்தும் சேவையினைதிறம்பட ஆற்றும் நூலகத்தின் முக்கியநபர்களில் ஒருவராகநூலகர் விளங்குகின்றார்.

ஒரு நூலகரானவர் காலத்தின் தேவைக்கேற்பதன் அறிவினையும் வளர்த்துக் கொண்டுஅறிவியல் தேடலுடையோரையும் ஆற்றுப்படுத்துபவராகமிளிர்தல் வேண்டும். இங்கு நூலகரின் வகிபாகங்கள் பற்றி நோக்குவோமாயின்....

ஓர் நூலகக் கட்டிடத்திற்கான இடத்தெரிவிலிருந்து நூலகமானது கட்டியெழுப்புதல் வரையானநுணுக்கமான அத்தனைவிடயங்களையும் கட்டிடக்கலைஞருடனும்,தாய் நிறுவனத்துடனும்கலந்தாலோசித்துதிட்டமிடலும் அவற்றைசெயற்படுத்துதலும்,கண்காணித்தலும் அறிக்கையிடலுமான விடயங்களில் நூலகரும் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

ஒரு நூலகத்தின் அகவடிவமைப்புசெயற்பாடுகளின் போது இயற்கைஅம்சங்களைக் கொண்டுஅழகூட்டுதலுடன் ஒதுக்கப்பட்டநிதியினைசிக்கனமாகவும்,பொருத்தமானதாகவும், தரமானதாகவும்,நீடித்துழைப்பதுமானபொருட்களைகொள்வனவுசெய்ய,அதுதொடர்பானவிடயங்களை நூலகர் தெரிந்துவைத்திருத்தல் வேண்டும் இதனூடாக கட்டிட வடிவமைப்பு விடயங்களில் நூலகர் முக்கியத்துவம் பெறுகின்றார். உதாரணமாக கூறின் நூலகங்களுக்கானதளபாடத் தெரிவுகளைஒவ்வொருபகுதிக்கும் தெரிவுசெய்யும் போதுநீண்டநேரவாசிப்புக்கு,சிறுவர்களுக்கு,வயோதிபர்களுக்குஎனஅனைவரையும் கருத்தில் கொண்டுதளபாடங்கள் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுதொடர்பானஅறிவுடையவராக நூலகர் காணப்படுவதனால் நூலகர் முக்கியத்துவம் பெறுகின்றார்.

மேலும் நூலகசேகரிப்புக்களைக் குறிப்பாக நூல்களைக் கொள்வனவுசெய்யும் போது காலத்தின் தேவைக்கும் ,வாசகர்களின் தேவைக்கும் ஏற்ப நூற் தெரிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும் ,அவற்றுக்குDDC போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அங்கிகரிக்கப்பட்டபொருத்தமான பகுப்பாக்க இலக்கங்களைவழங்குதல்,AACR - IIன் படிநூல்களுக்கான பட்டியலாக்கசெயற்பாடுகளைஒழுங்கமைத்தலும்,நூலகம் தொடர்பான நூல்களுக்கான தொழிநுட்ப வேலைகளின் பின்னர் ஒழுங்குஅடிப்படையில் நூல்களுக்கான அழைப்பு எண்களை கொண்டு புத்தகங்களை விரைவாக தேடிப்பெறத்தக்க வகையில்இராக்கைப்படுத்தஉதவுவதனூடாக நூலகத்தில் நூலகர் முக்கியத்துவம் பெறுகின்றார். அத்துடன் நூல்நீக்க நடைமுறைகளின் போது சமகாலதேவைஅற்ற,வாசகர் அதிகம் பயன் படுத்தாதநூல்கள் தொடர்பாககவனத்திற் கொண்டு அவற்றைவேறுபடுத்தி பிறிதொருவாசகரின் தேவையின் பொருட்டு பயன்படுத்த அதனைபொருத்தமான இடத்தில் சேமித்தலுடன் அனைத்து நூல்களையும் பேணுதல்,பராமரித்தல் தொடர்பானஅறிவினையும் கொண்டவராக நூலகர் விளங்குகின்றமையினால் நூலகநடவடிக்கைகளில் நூலகர் முக்கியத்துவம் பெறுகின்றார்.

மேலும்சமகாலதேவைப்பாடுடையகருத்தரங்குகளைஒழுங்கமைத்தல், புத்தக கண்காட்சிகளின் ஊடாக நூல்கள் தொடர்பான புதிய வரவுகளை வாசகருக்கு தெரியப்படுத்துதல் ,தேர்ந்தெடுக்கப்பட்டசேவைகளை (SDI)வழங்குதல்,விசேட தேவையுடையவர்களுக்கான சேவைகளைநடைமுறைப்படுத்துதல்,நடமாடும் சேவைகளை நூலகத்தின் பயனை முளுமையாக பெறமுடியாத பிரதேநங்களில் வழங்குதல் போன்ற நடைமுறைகளை மேற்கொள்ளுதல்,இரவல் வழங்கும்சேவை, உசாத்துணை சேவை,பத்திரிகை,சஞ்சிகைகளை வாசகர்பாவனைக்கு வழங்கும் சேவைபோன்றவற்றை ஒழுங்கமைக்கப்பட்டநடைமுறையினூடாகவழிநடாத்துதல் அவைதொடர்பானஅறிவுத்திறனைக் கொண்டுஆலோசனைவழங்குதலும்,வழிப்படுத்துதலும் போன்றநடைமுறைகளைமேற்கொள்வதால் நூலகர் முக்கியத்துவம் பெறுகின்றார். நவீன கால நடைமுறைகளுக்கேற்ப நூலக நடைமுறையுடன் அவற்றை இணைத்துக்கொண்டு பண்பாட்டு கலாசார விழுமியங்களை கடடிக்காத்து சமத்துவத்துடன் செயற்படும் நிறுவனங்களாக நூலகங்களை கொண்டியக்கும் வகையிலும் நூலகர் முக்கியத்துவமுடையவாரக காணப்படுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூலகம்
தொடர்பானபாதுகாப்புவிடயங்களைமேற்பார்வைசெய்தலினூடாகவும்,உத்தியோக த்தர்களைவழிப்படுத்துதல்,கடமைகளைப் பகிர்ந்தளித்துசெயற்படவைத்தல்,உத்தியோகத்தர்களிடத்தில் சுமுகமான சூழ்நிலையினை உருவாக்குதல் நூலக வேலைகளை விரைவாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ள ஆலோசனைகளை வழங்குதலும் ,ஒழுங்கமைத்தலும் ,உதவுதலும் அத்துடன் நூலக துறைசார் அறிவினை சக உத்தியோகத்தர்களுடன் பகிர்ந்துகொள்ளுதல், தேவையான பயிற்சிகளை பெற்றுக்கொள்ள வழிப்படுத்துதல் போன்றவிடயங்களைமேற்கொள்பவராகநூலகர் விளங்குகின்றார். நூலகத்திற்கும் வாசகருக்கும் இடையில் ஒருபாலமாகசெயற்படுபவராக நூலகர் காணப்படுவதனாலும் முக்கியத்துவமுடையவராகவிளங்குகின்றார்.
தொகுத்துநோக்கின்றபோது நூலகஅமைவிடம்,கட்டிடஅமைப்பு நூலக உள்ளக ,வெளிப்புற சூழல் அழ கூட்டடல்,தளபாடக் கொள்வனவு, நூற் தெரிவு, நூல்நீக்கம்,பாதுகாப்புபேணுகை,பட்டியலாக்கம்,பகுப்பாக்கம், நூல் ஒழுங்கமைப்பு,வாசகர்,உத்தியோகத்தர்களுடனானசமரசத் தன்மை பேணுதல் போன்ற பல்வேறுநடைமுறைகளினூடாகஒரு நூலகர் நூலகத்தில் முக்கியத்துவமுடையவராகவிளங்குவதனைக் கண்டுகொள்ளமுடியும்.

**திருமதி. றமாராசலிங்கம்**

**பாரதிலேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உலகைவென்றவர்கள் வாசித்தவர்களே

வாழும் நல்மார்க்கத்தைத்தெரிந்தவர்களே உலகைவென்றவர்கள் "உலகைவென்றவர்கள் வாசித்தவர்களே". வாசிப்பானது ஒருமனிதனை பூரணப்படுத்துகின்றது. வாசிப்பானது ஒருமனிதனை நல்வழிப்படுத்துகின்றது

வாசிப்புபழக்கத்தை மேற்கொள்வதன் மூலம்தீயமனிதனை,நல்லமனிதராகமாற்றக கூடியஅதீதசக்தி இருப்பதாககருதப்படுகின்றது.வாசிப்பைமேற்கொள்வதன் மூலம் சமூதாயத்தில் நற்குணம் நிறைந்தமனிதரைஉருவாக்க முடியும். வாசிப்பைதினமும் மேற்கொள்ளமேற்கொள்ளநாமும் உலகைவென்றவர்களாகஆகிவிடுகின்றோம்.

நூலகங்களுக்குச்சென்றுபுத்தகங்களைஎடுத்துவாசித்தல்பத்திரிகைகள்,சஞ்சிகைகள் போன்றவற்றைவாசித்தல் சிறந்த பொழுது போக்காக அமையும். வாசிப்பானதுமனதைக் கட்டுப்படுத்திஒருநிலைப்படுத்துகின்றது. வாசிப்பைமேம்படுத்தினால் வாழ்வுசிறப்பானதாகஅமையப் பெறும். வாசிப்புபழக்கமானதுஒருமனிதனைஅமைதிபெறசெய்கின்றது. இவ் உலகில் பலகோடிக்கணக்கானமக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். அதில் வாசிக்கத் தெரிந்தவர்கள் என்றும்,வாசிக்கத் தெரியாதவர்கள் என்றும் பலர் வாழ்கின்றனர்.எழுத்தறிவற்றோருக்கு எழுத்தறிவை ஊட்டவும் அதனூடாக வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தவும் நாம் ஊக்குவிக்கவேண்டும். அப்படிஊக்குவிப்பதன் மூலம் அவர்களும் உலகைவென்றவர்களாக ஆகமுடிகின்றது. "வாசிப்பு"என்பது சிறியோர் மட்டுமன்றிபெரியோர்களாலும் கையாளக்கூடியவிடயமாகும். வாசிப்பானதுமனதில் தோன்றும் தீயவிடயங்களைஅழித்தொழித்துவிடுகின்றது. இவ் சமூகத்தில் வாசிப்பானதுமிகவும் கீழ்நிலையில் உள்ளது. அதைநாம் மேல் நிலைக்குகொண்டுசெல்வதன் மூலம் உலகைவென்றவர்களைஉருவாக்க கூடியதாய் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பானதுகடினமானவிடயம் அல்ல. மிகவும் எளிதானவிடயம் அதைநாம் தினமும் கடைப்பிடிக்கவேண்டும். இன்றையகாலகட்டத்தில் காணப்படும் சமுதாயத்தில் பலபிரச்சனைகள் ஏற்பட மிகமுக்கியகாரணமாகவிளங்குவதுவாசிப்பானதுகுறைந்துவருவதாகும். இவ் சமுதாயத்தில் போதைப் பொருள் பாவனை,சிறுவர் துஷ்பிரயோகங்கள்,திருடுதல் போன்றபலசெயற்பாடுகள் நடந்துவருகின்றன. இப்படிபலஅநியாயங்கள் சமூகத்தில் நடப்பதற்குகாரணம் மனதில் தோன்றும் தீயஎண்ணணங்கள். ஆவற்றை முற்றாகஅழிக்கவேண்டும் ஆயின் இவ் வாசிப்புபழக்கத்தைமேற்கொள்ளவேண்டும். கல்விமட்டுமல்லாதுதம்மைச் சுற்றியுள்ளசமூகத்தைபற்றியும், பொது விடயங்கள் பற்றியும் தெரிந்துகொள்ளவாசிப்புமுக்கியமாகும்.

"தொட்டனைத்தூறும்மணற்கேணிமாந்தற்குகற்றனைத்தூறும்அறிவு" என்றவள்ளுவரின் வாக்கிற்குஏற்பநாம் எந்தளவிற்கு நூல்களைகற்கின்றோமோஅந்தளவிற்குநம்மால்முழுமையானஅறிவைபெற்றுக்கொள்ளமுடியும்."உடலுக்குஉடற்பயிற்சிபோலவேவ,சிப்புஎன்பதுநம்மனதிற்கும்,அறிக்குமானபயிற்சி"என்றபொன்மொழிவாசிப்பின் முக்கியத்துவத்தைக்கூறுகின்றது. வாசிப்பானதுநமதுஅறிவைவிரிவுபடுத்தி,எந்தஒருதுறையிலும்சிறந்துவிளங்க உதவுகின்றது.

வெவ்வேறுஎழுத்தாளர்களின்,புத்தகத்தைபடிப்பதுநமதுசிந்தனைக்குபுதியபரிமாணத்தைசேர்க்கிறதுஎனலாம். புத்தகங்கள் நமக்குதன்னம்பிக்கையைஅதிகரிக்கச் செய்கின்றது. வாசிப்பானதுமனிதர்களைமேன்மையுள்ளவர்களாகமாற்றுகின்றது. "அப்துல் கலாம்,மகாத்மாகாந்தி,நெல்சன் மண்டேலாமற்றும் லெனின்"போன்றோர் வாசிப்பால் உயர்ந்த இடத்தைஅடைந்தவர்கள் ஆவர். அறிவியல் தத்துவம் எனபலதுறைகளிலும் சிறந்தஅரிஸ்ரொட்டில் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்துபடித்துவந்தார். மனிதனின் தலைசிறந்தகண்டுபிடிப்புஎதுவென"ஆல்பர்ட் ஐன்ஸ்டீனிடம்"கேட்ட போதுஅவர் சிறிதும் யோசிக்காமல் "புத்தகம்"என்றுபதிலளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"தொட்டுப் பார்த்தால் வெறும் காகிதம்! தொடர்ந்துபடித்தால் அதுவேவெற்றியின் ஆயுதம்!"என்றபொன்மொழியைநினைவில் கொள்ளவேண்டும். சிறு வயதிலிருந்தேவாசிப்புபழக்கங்களைவளர்க்கவேண்டும். தினமும் வாசிப்பதற்குஎனநேரத்தைஒதுக்குவதுஅவசியம். "ஒருநல்ல நூல் ஒருநல்லநண்பனுக்குஒப்பானது". அதாவது, நூல்கள் நமக்குச் சிறந்தவழிகாட்டியாகவும்,ஆசிரியராகவும் திகழ்கிறன. எனவே,"ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்"என்றஒளவையின் முதுமொழிக் ஏற்பதினமும் வாசிப்போம். வாசிப்பைஒருபழக்கமாகமாற்றிக் கொள்வோம். வாழ்வில் வெற்றிபெறுவோம்.

ஜெ. அபிநயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முயற்சிவீண்போகாது

கிராமப் புறத்திலேமிகவும் ஏழைக்குடும்பத்தில் பிறந்துதனதுசிறியவயதிலே பெற்றோர்களை இழந்து,தனதுஉறவினரின் அரவணைப்பிலேவளர்ந்துவந்தான் வேலன். சிறுவயதினிலேபடிப்பதற்குஆர்வம் இருந்தும் தான் வளர்ந்தஉறவினரின் பொருளாதாரக் கஷ்ரநிலைகாரணமாகபடிப்பும் தடைப்பட்டது. வேதனைப்பட்டான்.

பல கஷ்டங்களையும்,வறுமையையும்,துன்பங்களையும் தன்னுள் சுமந்துகொண்டவனாக,தனதுபிரதேசத்தில் உள்ளமேட்டுநிலக்காணியில் தானியப் பயிர்ச் செய்கையைசெய்கைபண்ணிஅதன் மூலமாகநல்லவிளைச்சலையும் வருவாயையும் பெற்றுதனது கஷ்ட நிலையில் இருந்துஓரளவுவிடுபட்டுவாழத் தொடங்கினான்.
இரந்துவருவோருக்கு இல்லையெனாது இருப்பதில் கொஞ்சமாவது கொடுத்துசந்தோசமாகவாழ்ந்தான்.

கூட்டமோ,குடிப்பழக்கமோவேலனிடம் கிடையாது. நல்லபண்பாடும்,பணிவும்,முயற்சியும் உடையவனாகவாழ்ந்ததினால் "வேலனை"அருகில் உள்ளவீட்டார் தங்கள் மகளாகிய"கமலத்திற்கு"திருமணம் பேசிநல்லதிருமணமுகூர்த்தத்தில் திருமணம் செய்துவைத்தார்கள்.

இனிதே இருவரும் சந்தோசமாக இல்லறம் நடாத்தி இரண்டுஅழகான இரட்டைக் குழந்தைகளைப்பெற்றெடுத்து இரண்டுபேருக்கும் "கமலா,விமலா"எனும் அழகானநாமத்தைச் சூட்டினார்கள்.

வேலன்சிறுவயதில் இருந்துபடிக்கவேண்டும் என்ற தன் ஆசை தடைப்பட்டதைஒருகணம் தன்மனதில் நினைத்துவேதனைஅடைகிறான்.
அந்தத் தாக்கத்தின் விளைவுதன்னுடைய இரண்டுபிள்ளைகளையும் எதிர்காலத்தில் வைத்தியராக்கிஎமதுபடுவான் கரைப்பிரதேசத்திலே சேவைசெய்யவேண்டுமென்றஆசையுடன் பாடசாலைக்குஅனுப்பிபடிக்கவைக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

“பாடசாலையில் ஆசிரியர்களுக்குக் கட்டுப்பட்டு” பணிவுடன் நடக்கவேண்டுமென்றும் சகலமாணவர்களுடனும்,அன்பாகப் பழகவேண்டுமென்றும்,பலபுத்திமதிகளைக் கூறி தன்னிடம் இருக்கும் “சைக்கிள்” மூலமாகவேபாடசாலைக்கு அழைத்துச் சென்றுவருவான்.

அந்தநாட்களில் பாடசாலைகளில் இலவசப் பாடப்புத்தகங்களோ, இலவசசீருடைகளோ, இல்லாதகாலம். பாடப்புத்தகங்களைமற்றவர்களிடம் இரவல் வாங்கிபல கஷ்ரங்களுக்குமத்தியில் ஐந்தாம் தரம் வரைக்கும் கற்றுபுலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றார்கள். பாடசாலையிலும்,சமூகத்திலும் பெரும் வரவேற்பும்,ஆதரவும் கிடைக்கப்பெற்றன.

இம்மாணவர்களின் வறுமைநிலையினையும் கெட்டித்தனத்தையும் உணர்ந்தசிலதொண்டுநிறுவனங்கள் இவர்களின் கல்விநிலைக்குஉதவமுன்வந்ததோடுநகர்ப் புறத்துபாடசாலையொன்றில் தொடர்ந்துகல்விகற்பதற்குஅனுமதியினைப் பெற்றுக் கொடுத்தன.

இவர்கள் இரண்டுபேர்களினதும் புலமைப் பரீட்சைப் பெறுபேற்றைக் கண்டுவியந்தஅப்பாடசாலைஅதிபர்,ஆசிரியர்கள் அவர்களைவரவேற்றுமுன்னுரிமைஅளித்து,க.பொ.த.உ.தரத்திலும் திறமைச் சித்திபெற்றுவைத்தியபிரிவிற்குசெல்லவேண்டுமென்றுஆசீர்வாதம் வழங்கினார்கள். விடுதிவசதிகளும் போக்குவரத்துவசதிகளும் போதியளவு இல்லாதகாலம்.

வீட்டில்இருந்தேவேலன்ஒவ்வொருநாளும் அவர்களைபாடசாலைக்குகொண்டுவருவான். நாட்டில் பிரச்சினைகள் தலைதூக்கி இருந்தன. ஒருவருக்குஒருவர் உதவிசெய்வதும் மிகக்குறைவு,“தானும் தன்பாடும்”என்றநிலையில் மக்கள் வாழ்ந்தனர்.

உயிருக்குக் கூட உத்தரவாதம் இல்லாதகாலமாகஅக்காலம் காணப்பட்டது. அப்படிப்பட்ட கஷ்ரமானஅந்தக் காலத்திலேஅந்நிலைக்குமத்தியிலும் கூட மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தளராதுபிள்ளைகளைக் கற்பிக்கலானான். தந்தையின் கஷ்ரங்களைஉணர்ந்தஅவர்களும் நன்றாகப் படித்தார்கள்.

பாடசாலை முடிந்த பின்புதனதுதந்தைவரும்வரைபாடசாலைக்குஅருகில் உள்ளபெரிய"நூலகத்திற்குச்"சென்று தங்களுக்குத் தேவையான நூல்களைப் பெற்றுவாசிக்கலானார்கள். நேரத்தைவீண்விரயம் செய்யாமல் கிடைத்தசந்தர்ப்பத்தினையும், வாய்ப்பினையும் பயன்படுத்திக் கொண்டார்கள்.

இப்போதுஉள்ளமாணவச் செல்வங்கள் நூலகத்திற்குச் சென்றுஅங்குள்ள நூல்களைக் கற்றுஅதைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. "ரியூசன்"வசதிகளைமட்டும் நம்பிஅறிவுசார்ந்தவிடயங்களைஅறிந்துகொள்வதில் தவறிவிடுகிறார்கள்.

ஆனால் "கமலா,விமலா"என்ற இரு மாணவர்களும் அதற்கு வித்தியாசமானமாணவர்களாக, நூல்களைத் தேடிக்கற்றுக.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தயாரானார்கள்.வகுப்பில் நடைபெறும் தவணைப் பரீட்சைகளிலும் சிறந்தபுள்ளிகளைப் பெற்றார்கள். அதிபர்,ஆசிரியர்களின் பாராட்டுக்கள் குவிந்தன. நடைபெறவிருக்கின்றA/Lபரீட்சையில் சிறந்தபெறுபேறுகளைப் பெற்றுசித்தியடைவதற்குஆசீர்வாதங்களும் வழங்கப்பட்டன.

க.பொ.த (உ.த) மாணவர்களுக்கானபரீட்சையும் ஆரம்பிக்கப்பட்டன. இருவரும் பரீட்சைக்குத் தோற்றினார்கள். பரீட்சையைதிருப்தியுடன் செய்துமுடித்தார்கள். பரீட்சைப் பெறுபேறுவரும்வரைகாலத்தைவீணாகக் கழிக்காமல் அருகில் உள்ளதையல் பயிற்சிநிலையத்துக்குச் சென்றுதையல் பயிற்சிகளைசீராகக் கற்றுநிறுவனங்களின் உதவியுடன் "தையல் மெசின்"ஒன்றினையும் இலவசமாகப் பெற்றார்கள். இப்பிரதேசத்தில் உள்ளவறியமக்கள் சிலருக்குகுறைந்தவிலையில் உடுப்புக்களைத் தைத்துக் கொடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"வளரும்பயிர் முளையில் தெரியும் என்பதுபோல்"அவர்களின் எதிர்காலமுன்னேற்றம் அவர்களின் சிறந்தசெயற்பாடுகள் மூலமாகக் காணக்கூடியதாக இருந்தது. தங்களின் குடும்பநிலையினைஉணர்ந்தவர்கள் மட்டுமன்றிஅவர்களின் பொருளாதார கஷ்டங்களுக்குஏற்பவாழ்ந்துவருகிறார்கள் என்றால் அதுமிகையாகாது.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. பரீட்சைப் பெறுபேறும் வெளியாகின. இவர்களின் பரீட்சைமுடிவினைஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தகுடும்பத்தினரினதும் அப்பகுதிமக்களினதும் காதில் ஆனந்தமானசெய்திகள் வெளிவரத் தொடங்கின. இரண்டுபேரும் கற்றபாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் மூன்றுபாடங்களிலும் திறமைச் சித்தியைப் பெற்றுபாடசாலையில் அதிபர் ஆசிரியர்களையும் பிரமிக்கவைத்தனர்.

படுவான்கரைப்,பிரதேசத்திலேமுதன்முறையாகவைத்தியத்துறையில்ஒரேகுடும்பத்தைத் சேர்ந்த இரண்டுபிள்ளைகளும் தெரிவுசெய்யப்பட்டுவைத்தியபீடம் செல்வதும் இதுவேமுதன் முறையாகும்.

"முயற்சிவீண் போகாது"என்பதற்குஅவர்களின் முயற்சியும், நூல்களைத் தேடிக்கற்கும் திறனும்,அறிவுதிறன்,மனப்பாங்கும் ,பணிவும்,பண்பாடும் இவர்களைநல்லநிலைக்குஉயர்த்தியுள்ளது.

தம்,தந்தையின் குறிக்கோள் எதுவோ ,அதை இவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். அவர்களின் பிரதேசத்திலேவைத்தியராகி பணிபுரியவேண்டுமென்றதந்தை இலட்சியம் நிறைவானது. "கமலா"நகரப் புறத்திலுள்ளவைத்தியசாலையில் கடமைபுரியசென்றாள். "விமலாவோ"தனதுபிரதேசத்தில் உள்ளவைத்தியசாலையில் சேவைசெய்யலானாள்.

பாடசாலையில் கற்கும் வறுமையான மாணவர்களுக்கு இலவசமாக,கற்றல் உபகரணங்கள், நூல்களைப் பெற்றுக் கொடுத்தார்கள். சிறுவயதில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூலகங்களுக்குச் சென்று நூல்களைக் கற்றுக் கொள்வதற்குரியஆர்வத்தையும் ஆலோசனையையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

முயற்சியுள்ளஒருவனுக்கே“இறைவனும் பக்கதுணையிருப்பான் முயற்சியுள்ளஒருவன் நிச்சயம் முன்னேறுவான் என்பதனை இவ்வாக்கம் வெளிப்படுத்துகிறது. ஆகவேமுயற்சிசெய்வோம் முன்னேறுவோம்”

திரு. மு. பரமேஸ்வரன்
(ஓய்வுபெற்றஅதிபர்)
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குன்றென நிமிர்ந்து நில்

நாம் அனைவரும் ஆத்திசூடி,கொண்றைவேந்தன்,திருக்குறள்,பழமொழி என்பவற்றை அறிவோம்.ஆனால் நம்முள் எத்தனை பேருக்குத் தெரியும் அதன் கருத்தும்,தத்துவங்களும்?அவ்வகையில் பாரதியார் எழுதிய புதிய ஆத்திசூடியில்"குன்றென நிமிர்ந்து நில்" எனும் ஆத்திசூடியின் பொருளையும் முக்கியத்தையும் அறிவோம் வாரீர்..

வாழ்வதில் கற்பதை விடவும் கற்றதை பின்பற்றுவதே சிறப்பு. "குன்றென நிமிர்ந்து நில்" என்பதன் விளக்கம் "சிறு மலையைப்போன்ற திண்மையுடனும் , உறுதியுடனும் , தன்னம்பிக்கையுடனும் தலைநிமிர்த்தி நெஞ்சுயர்த்தி நிற்க வேண்டும்."என்பதாகும்.இயற்கையின் சிறு மலைகளைக்கண்டு நாம் மகிழ்வும் , வியப்பும் அடைவோம்.காரணம் என்ன?அதன் அழகும் எவருக்குமே தலைகுனியாமல் தைரியமாக நிமிர்ந்து நிற்கும் அமைப்பும். அதேபோல் நாமும் மூடநம்பிக்கைக்கும் , துன்புறுத்தல்களுக்கும் அஞ்சாதுதலைநிமிர்ந்து தைரியமாக உறுதியுடன் சிறப்பான மனிதனாக வாழ வேண்டும்.

கேட்டுவிட்டோம் , அறிந்துவிட்டோம், எதை? புாரதியாரின் வழிகாட்டலையும் நம் வாழ்வின் முக்கிய விழுமிய கருத்தையும். இனி அதை பின்பற்றி சிறப்புடன் நாம் வாழ வேண்டும். நாம் காணும் உலகு சிறிது ஆனால் நாம் காண்பதற்கு இருக்கும் விடயங்களோ பெரிது.அவ்வாறான விடயங்களை நாம் வாழ்வில் எதிர் கொள்ள நேரிடலாம்.அவை நல்லவையாகவும் இருக்கலாம் தீயவையாகவும் இருக்கலாம். எதுவாயினும் அதற்கு அச்சப்படாமல் தைரியமாக முகம் கொடுத்து வெற்றியோ தோல்வியோ அதனை ஏற்று எதற்கும் துணிந்து தலைநிமிர்ந்து நாம் வாழ்வை வாழ வேண்டும்.

நாம் நிதமும் வாழ்வில் கடைப்பிடிக்கும் விடயங்களில் இதையும் ஒன்றாக ஏற்று, இறுதி வரை கடைப்பிடித்து சிறப்புடன் வாழ்ந்து சமுதாயத்தில் நற்பிரஜையாக தலைசிறந்து வாழ்க.

**அனுஷாந்தன் டிஷாலி**
**பாரதிலேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அன்னை ..........

என்னை உருவாக்கிய அறிவாராட்சி கூடம்......
கண்ணை எமக்கு தந்து - இவ்
மண்ணை காண வைத்த மகா தெய்வம்........

சின்னஞ்சிறு இதயம் - அதனுள்ளே
சிறு மூச்சு பெருமூச்சு இரண்டையும்
சேர்த்தனுப்பி – எனை உருவாக்கி
வளர்த்த சிந்தனை சிற்பியவள்............

வயிற்றுள்ளே நானிருந்தேன் – என்
வாய் பேச முடியாத – தொப்பிள்
கயிற்றினால் உணவனுப்பி – எனை
கனிவோடு பார்த்தவள்

அன்னை............
என்னையும் உன்னையும் - இவ்
உலக கண்ணையும் திறந்து வைத்த - எம்
காவல் தெய்வம்.............
வேதனை தானேற்று – எம்மை
விண்ணை தொடவைப்பாள்........
சாதனை செய்ய வைப்பாள் - ஆனால் அவள்
சாதாரணமாகத்தான் இருப்பாள்..............
அன்னை ஓர் அறிவாராட்சி கூடம்.............

பத்து திங்களவள் - பக்குவமாய்
தன்னுள் வைத்து
செத்து பிளைத்து – சீவன்
எமக்களித்து

முத்தமெனக்கிட்டு – பெரு
மூச்சு விடும் போது – மெதுவாய்
கத்துகின்ற தன் குழவியின்
சப்தம் காதையெட்டுகையில்
பெருமையடைவாள் - அந்தப்
பெண் பிரம்மா..............

அன்னை
என்னை உருவாக்கிய
அறிவாராட்சி கூடம்.............

அன்புடன் : **ஆர்.ரிஷாங்கதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இசைகூட இரைச்சல்**

**ஆகும் போதுபயணப்படு!**

கிழித்துவெளிப்படுகாற்றை,

துச்சமாக்கி தூக்கிப்

போடுகாலத்தை,

எதையும் தேடாத்

துறவு பூணு,

வேறுஉலகம் நாடு,

கவிதையைபிரசவி,

நீயாரெனஅறியமுன்பு

இவ் உலகைஅறிய

வேட்கைகொள்!

பிடித்திழுக்கும் வாழ்க்கைச்

சுமைகளைதூரவீசு,

யுார்யாரோஎவ்வாறோபார்த்த

பூமிதனை உன் கோணம்

எக் கோணமெனஅறியட்டும்.

கலவை இல்லாஓம்காரம் போல

இயற்கையின் ஓசை உன்

செவிப்பறையைஅறையட்டும்!

**அக்ஸயாபாஸ்கரமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கற்பதுகடமை

வளத்துடன் பிறந்தபோதும்
வல்லமைஅடைந்தபோதும்
களம்பலகண்டால் அன்றிக்
கானலேவெற்றி அ∴தாய்
இளமையில் கல்வி இன்றி
இருப்பவர்க் கெல்லாம் எந்தத்
தளத்தினைஅமைத்துத்தந்தும்
தன்னிலைஉயர்வதில்லை!

வறுமையின் மையப்புள்ளி
மறைந்திட !அறிவுக்கண்ணைப்
பெறுதலேபெருமைசேர்க்கும்
பிறப்பிதன் உயர்வைநல்கும்
நறுமலர் காடாய் வாழ்வை
நாளெலாம் கொடுத்துநிற்கும்
சிறுமையில்லாதமாந்தர்
சிந்தனைஒளிரவைக்கும்!

கல்வியோடொழுக்கம் எல்லாம்
கற்றிடும் சமூகத்தாலே
தொல்லைகள் இன்னித் தூய
சொப்பனம் வெல்லும்!நல்லோர்
சொல்லறம் போலேவாழ்வும்
சுடர்ந்திடும் அல்லால்!எந்த
வுல்லமைகொண்டும் மாற்றம்
வளர்த்திடமுடியாதிங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்வியேஅறிவைநல்கும்

கலங்கரைவிளக்குமாகும்

கல்வியேசமுதாயத்தின்

காவலாய் மாறும்!நல்ல

கல்வியேமனிதப் பண்பை

கடத்திடும்!காலம் வெல்லக்

கல்வியேஊற்றுக் கண்ணாம்

கற்றிடல் கடமையன்றோ!

சௌமினிரவிச்சந்திரன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நூல்களால் நான் ஒளிர்கிறேன்

பூட்டிவைத்தஅறையிலே புதமை எனநான் கண்ட
பொக்கிஷமேஎனபுத்தகமே......
இருளெனகிடந்தஎன் மூளைக்குஒளிஎனகிடைத்த
வெளிச்சமேஎன் புத்தகமே.......

என்னுடையகுழப்பங்கள் கவலைகள் அத்தனையும் நீங்க
கிடைத்தநல் ஆசானே......
தோற்கிறேன் ஒவ்வொருதடவையும் நான் உன்னிடத்திலே
உனைநீக்கிடமுடியாமல் என் ஆசானே.....

எனக்கெனயாரும் இல்லைஎனநான் தவித்ததனிமையை
இனித்திடசெய்தஎன் ஒளிவிளக்கே.....
கல்வியேஒருவரை முழுமை படுத்துகிறதுஅதற்குஆதாரமே
நீதானேஎன் ஒளிவிளக்கே......

நீஅறிந்திடமாட்டாய் உன்னால் தான் நான்
ஒளிர்கிறேன் என்பதை.....
தெரியாவிடின் அறிந்துகொள் உன்னுடையசிநேகமே
என்னைமண்ணிலேஒளிரசெய்கிறது...

சிலசமயங்களில் எனக்குஉன்னைதொடும் போது சில
ஞாபகங்கள் வருகிறது.....
அதுஎன்னதெரியுமா? சிசுஎனநான் சூடித் திரிகையிலே
என் அன்னைஉன்னைஎன் கைகளில் தந்தநொடிகள்.....

அன்றுஉன்னைதொட்டநான் இன்றுவரைகிட்டிட
மனமில்லை.....
காகிதம் எனஉன்னைசிலர் வெறுக்கிறார் அவர்கள் அறிய
நீகாகிதமல்லஅதிலேயும் வெளிச்சத்தைகொடுக்கும் சுடர் என்று.....
நீதான் என் சுடர் என்னைஒளிய+ட்டுபவன் உன்னாலே
ஒளிர்கின்றேன்......

**1ஆம் இடம்**

**தி.நிக்ஷனா டில்ருக்ஷி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நூல்களால் நான் ஒளிர்கிறேன்

இருளைப்போக்கிஒளியைஊட்டவே
இங்குபூத்த ஜோதியாய் உதித்த நூல்களே
இப்பூவுலகின் பேரிருளைநீக்கிடவே
நூல்கள் எடுத்தபரிணாமங்களோபலவாறு.

இப்பூவுலகமனிதரெல்லாம் இங்குஅறியாமையெனும்
படுகுழியில் விழுந்திடவேஉயிர்காக்கும் கைகளாக
தோள் கொடுத்த நூல்களின் பெருமையோபலவாறு
உண்டெனினும் பலாறு.

மனிதர்களின் சுயநலமெனும் இருள் நீங்கிடவே
மனோபாவம் வானைப்போலஎல்லைகடந்திடவே
வழி செய்யும் நூல்களே–உமது
பணிக்கு இங்குஎல்லையுண்டோ

வாசிப்பேனும் நற்பணியைஆற்றவைத்து
இனித்தபுவி, இயற்கைஎழில் யாவற்றையும்
எம் கண்முன்னேஒருநொடியில் காட்டவல்ல
மாயா ஜாலவித்தைகற்ற இடமெதுவோ

பலதிரட்டுவித்தைகளையும் ஓரிடத்தில்
குவித்துவைத்தவித்தைகாட்டும் இடமெதுவோ
அங்குஎம் சொர்க்கலோக இன்பத்தைஅளித்து
ஒளியேற்றும் சுடரெதுவோ

எவ்வாறுபுகழ்ந்திடினும் ஈடில்லாத
என்றென்றும் நிலைபெற்றிருக்கும்
நூல்களேநீஎன்றுமவாழ்க உன்
புத்துயிர் அளித்துஒளியேற்றும் சேவைதொடர்ந்துஓங்குக.

**2ஆம் இடம்**
**ப.சப்தவி**

**வாசிப்பேஎனதுசுவாசமே...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்னோடுஎத்தனைஉறவுகள் இருந்தாலும்
அத்தனைஉறவுகளுக்கும் சமமாகஎன்னோடு
ஒன்றாகவேபின்னிப்பிணைந்துஎன் - உயிருக்கு
உரமூட்டும் சுவாசமேஎனதுவாசிப்பே....

என்னைநல்வழிப்படுத்திஎனக்குநல்லவைகளை
புகட்டும் என் நண்பர்களுக்குநநிகராக–என்னோடு
காலம் காலமாகஒன்றுபட்டவாழ்க்கையில்
சுகம் தரும் சுவாசமேஎனதுவாசிப்பே.....

நான் கெட்டவழியில் செல்லும் போத–எனக்கு
நல்லவைகளைஎடுத்துரைத்து–தினம்தினம்
என் வாழ்வில் ஒளியேற்றும் ஒருமெழுகுவர்த்தியாக
என்னைசுடரவைக்கும் சுவாகமேஎனதுவாசிப்பே....

என் கண் எதிரேஉலாவிக் கொண்டு இருக்கும்
தெய்வங்களைவிட்டுவிட்டுகோவில் கோவிலாக
அலைகின்றேன் முக்திகேட்டு - இதற்கான
முக்தி இன்பம் என்னோடுகலந்தவாசிப்பே....

சுவாசித்தேன் சுவாசித்தேன் - என்
மனம் தூய்டையானது
வாசித்தேன் வாசித்தே–என்
புத்திவெளிப்பட்டது.

***"வாசியுங்கள் நூல்களைசுவாசியுங்கள்"***

**3ஆம் இடம்**

**உ.நிதுஷியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நீரிழிவுநோயைவெல்வோமா?

இலங்கைமக்களின்ஆரோக்கியத்தன்மைஉலகிலேயேஏனையஅபிவிருத்திஅடைந்தநாடுகளுடன்ஒப்பிடும்போதுமுன்னிலையில்இருக்கின்றது.
மேம்பட்டசுகாதாரசேவைகளாலும்,
மக்களின்எழுத்தறிவில்ஏற்பட்டமுன்னேற்றத்தாலும்தொற்றுநோய்களின்அளவும்தாய்மார்க்குழந்தைகளின்மரணவீதம்போன்றனகணிசமாககுறைந்தமையும்இதற்குகாரணம்ஆகும்.
ஆயினும்நீரிழிவுநோயாளர்களின்எண்ணிக்கைநாளுக்குநாள்அபாயகரமானமுறையில்அதிகரிப்பதைமறுக்கமுடியாதுள்ளது.

இதற்குபரம்பரைஒருகாரணமாகஇருந்தாலும்ஒழுங்கற்றவாழ்க்கைமுறைமிகப்பெரியபங்குவகிக்கின்றது.
கட்டுப்பாடற்றநீரிழிவுநோயின்விளைவாககுருட்டுத்தன்மை, மாரடைப்பு, பாரிசவாதம், சிறுநீரகசெயலிழப்பு, ஆறாதகாயம்என்பனஏற்படஅதிகவாய்ப்புண்டு.
இதுதனிநபரினதும்,
குடும்பத்தினரினதும்நாட்டினதும்ஒட்டுமொத்தவளர்ச்சியில்பாதிப்பைஏற்படுத்தும்.

நீரிழிவுநோயைமுற்றாககுணப்படுத்துவதுமிகஅரிது.
ஆனால்இதனைகட்டுப்பாட்டுக்குள்வைத்துக்கொள்ளமுடியும்.
நீரிழிவுநோயைஇரண்டுமுக்கியமுறைகள்மூலம்கட்டுப்படுத்திக்கொள்ளலாம்.
முதலாவது,
வாழ்க்கைமுறையில்சிலஆரோக்கியமானநல்லபழக்கவழக்கங்களைகடைப்பிடித்தல்இதுவேநீழிவுநோயைவெல்லும்அத்திவாரம்ஆகும். இரண்டாவது ,
வைத்தியஆலோசனைஅமையமருந்துமாத்திரைகளைபாவித்தல்.
அத்திவாரம்உறுதியாகஇருந்தால்மட்டுமேமேலேஎழும்பும்கட்டிடம்நிலைத்துநிற்கும்.

நீரிழிவுநோயினைகட்டுப்படுத்துவதில்மனிதர்கள்தமதுவாழ்க்கைமுறையில்பொருத்தமானதிருத்தங்களைசெய்துகொள்வதுஅடிப்படையானதும்அவசியமானதுமாகும்.
இதனைசரிவரபின்பற்றாதவர்களால்மாத்திரைகளையோஇன்சுலின்மருந்தினையோமாத்திரம்பாவித்துநீரிழிவுநோயினைகட்டுப்பாட்டில்வைத்திருப்பதும்ஆரோக்கியமாகவாழ்வதும்சாத்தியமற்றதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழ்க்கைமுறைமாற்றமானதுபின்வரும்விடயங்களில்கவனம்செலுத்திஆரோக்கியமாகவாழ்தல்ஆகும். ஆரோக்கியமானஉணவுப்பழக்கத்தைகடைப்பிடித்தல், சீரானஉடற்பயிற்சிகளைசெய்துகொள்ளல், கவலைபதற்றமட்டஅமைதியானமகிழ்ச்சியானவாழ்க்கைமுறையைமேற்கொள்ளுதல், மதுபுகைத்தலைதவிர்த்தல்என்பனவாகும்.

உணவுஎன்பதுஎமதுவாழ்க்கையில்இன்பத்தைதரும்ஒருவிடயமாகும். உணவேமருந்தாகவேண்டும். இல்லாவிடில்மருந்தேஉணவாகஅமையநேரிடும்.

நீரிழிவுநோயுடையஒருவர்பொதுவாகவீட்டில்உள்ளவர்கள்உட்கொள்ளும்நிறைஉணவினைஉட்கொள்ளமுடியும். அதாவதுமாப்பொருள், கொழுப்பு, புரதம், விட்டமின்கள்மற்றும்தாதுபொருட்கள்தேவையானஅளவுஅடங்கியஉணவினைஉண்ணமுடியும்.
மாபொருள்சத்தினைஅதிகநார்ச்சத்துக்கொண்டதவிடுநீக்காததானியங்களில்இருந்தும்,
கொழுப்புசத்தினைஉடலுக்குத்தீங்கற்றகொழுப்பினைகொண்டஒலிவ்எண்ணெய் , சூரியகாந்திஎண்ணெய், நல்லெண்ணெய்,
சிறியமீன்கள்போன்றவற்றில்இருந்தும்பெற்றுக்கொள்ளலாம்.
புரதச்சத்தினைசிறியமீன்கள்மற்றும்தோல்நீக்கப்பட்டகோழிஇறைச்சிபோன்றமாமிசபுரதத்தில்இருந்தும், கடலை, பருப்பு ,கௌப்பி,
அவரைவகைபோன்றதாவரபுரதத்தில்இருந்தும்பெற்றுக்கொள்ளலாம்.

விற்றமின்கள்மற்றும்தாதுபொருட்களைஇனிப்புகுறைவானபழங்கள்மற்றும்காய்கறிகீரைவகைகளில்இருந்துபெற்றுக்கொள்வதுநல்லது.
அத்தோடுஇவர்கள்சிலவகைஉணவினைதவிர்த்துக்கொள்வதோடுசிலவகைஉணவினைநடுத்தரஅளவிலும்இன்னும்சிலவகைஉணவினைதாராளமாகவும்உட்கொள்ளமுடியும்.
இவைபற்றிதெளிவாகத்தெரிந்துவைத்திருப்பதுமுக்கியமானதாகும்.

உணவைத்தவிரஉடற்பயிற்சியும்நீரிழிவுநோயைகட்டுப்பாட்டில்வைத்துக்கொள்ளமிகஅவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உடற்பயிற்சிசெய்யும்போதுசாதாரணஉடல்நிறைஉடையவர்கள்தினமும்அல்ல துவாரத்தில்ஐந்துநாட்கள் 30
நிமிடத்திற்குகுறையாதுஉடற்பயிற்சிகளைஒழுங்காகசெய்தல்வேண்டும்.
அதன்படிவேகநடை, மெதுவாகஓடுதல், சைக்கிள்ஓடுதல்,
நீச்சல்இவற்றுள்ஒன்றைநோய்நிலைமை,
வயதுஎன்பவற்றுக்கேற்பவைத்தியஆலோசனையுடன்தெரிவுசெய்தல்வேண்டும்.
மேலும்உடற்பயிற்சிசெய்யும்இடம்பாதுகாப்பானதும்காற்றோட்டம்உடையதாக வும்இருத்தல்வேண்டும்.

அத்துடன்கவலைபதற்றமட்டஅமைதியானசந்தோஷமானவாழ்க்கைவாழுதல்அ வசியம்.
ஆன்மீகநடவடிக்கைகளில்ஈடுபடுதல்அன்றாடவேலைகளைஉரியநேரத்தில்ஒழு ங்காகசெய்துமுடித்தல்வாழ்க்கையைஇலகுவாக்கும்.
மனஅழுத்தம்தரக்கூடியபிரச்சனைகள்ஏற்படின்அதைநம்பிக்கைக்குரியஒருவரு டன்பகிர்ந்துஆலோசனைபெறல்அப்பிரச்சனைக்குமுகங்கொடுக்கஉதவும்.
குடும்பத்தாரிடையேசிறந்தஉறவும்ஆரோக்கியமானகருத்துபரிமாற்றமும்,
வாரத்தில்குறைந்ததுஒருநாளேனும்குடும்பஉறவினர்கள்ஒன்றாககூடிகதைத்தும கிழ்வாய்இருத்தல்அல்லதுகடற்கரை, பூங்கா,
சமயவழிபாட்டுதலங்களுக்குஒன்றுசேர்ந்துசென்றுவருதல்மனஅழுத்தத்தைகு றைக்கும்.

அதுமட்டுமல்லாதுபுகைத்தலையும்,
மதுஅருந்துதலையும்தவிர்த்தல்நீரிழிவுநோயாளர்களுக்குகூடியநன்மைபயக்கும்
.
எனவேதமக்குநீரிழிவுநோய்எனஅறிந்தவுடன்அநாவசியமாகபதற்றமும்கவலை யும்படாமல்இயல்பானவாழ்க்கைமுறையைபின்பற்றிமேற்கூறப்பட்டவிடயங்க ளைகருத்தில்கொண்டுவாழ்க்கையைஎதிர்கொண்டால்நீரிழிவுடன்நிறைவானவா ழ்க்கைவாழ்வதுசுலபம்.

**DR.தர்ஷினிகருப்பையாபிள்ளை**
**நீரிழிவுமற்றும்அகச்சுரப்பிவிசேடவைத்தியநிபுணர்**
**போதனாவைத்தியசாலைமட்டக்களப்பு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உலகளாவியசுற்றாடல் பாதுகாப்பும் சூழலியல் வகிபாகமும்

சூழலில் உயிர் பல்வகைமையின் தாக்கம் நாம் வாழும் சுற்றுப்புறச் சூழலில் பல்வேறுவகையானதாவரங்களும் விலங்குகளும் பறவைகளும் நகரூயிர்களம் தரையிலும் நீரிலும் இயற்கைச் சூழலில் வாழ்ந்துவருவதும் ஓர் இயற்கைக் கொடையின் அரும் செல்வமாகும்.இந்த இயற்கைச் சூழலானது மனிதனின் பல்வேறுசெயற்கையானசெயற்பாடுகளினால் சூழுப்படும் போதுஉயிர் பல்வகைமையில் பலதாக்கங்களைஏற்படுத்துவதனால் உயிர்வாழசெயற்பாடுகளுக்குபல இடையூறுகள் ஏற்படுகின்றன.

### ஓர் உணவுச் சங்கிலித் தொடரைஎடுத்துநோக்கினால்




இவ்வாறான இடைத்தொடர்பானது ஓர் உணவுவலையாகமாறிபல்வேறுஉயிரினங்களுக்கு இடையில் உணவுப் போட்டியும் உயிர் வாழ் போட்டியும் ஏற்படுகின்றன. அத்துடன் ஒன்றுடன் ஒன்றுநெருங்கியதொடர்பைக் கொண்டுள்ளதைஅவதானிக்கமுடிகின்றது.

இயற்கைக்காடுஅழிக்கப்படுவதனால் இயற்கைச்சூழல் பாதிக்கப்படுகிறது. மரங்களைமனிதன் வெட்டுவதனால் மற்றும் மண் அரிப்புவரட்சிபோன்ற இயற்கைநிகழ்வுகளினால் சூழல் சமநிலைபாதிக்கப்படுகிறது. இயற்கைச் செல்வம் அழிக்கப்படுவதுமட்டுமன்றிவெப்பநிலைஅதிகரிப்பும் மழைவீழ்ச்சிகுறைவடைந்துசெல்கின்றன. காடுகள் அழிவடைவதும் வாழ்விடம் இல்லாதனால் அரியவகைதாவரங்களும்,அரியவகைபறவைகளும்,அரியவகைமிருகங்களும் அழிவடைந்துசெல்கின்றன. காடுகள் மனிதசெயற்பாட்டினால் ஏற்படும் செயற்கைஅனர்த்தங்களும் மற்றும் சூழலில் ஏற்படும் இயற்கைஅனர்த்தங்களும் காட்டுவளம் அழிவடைந்துசெல்கின்றது.

இதனால் பல்வகைபறவையினங்கள் வாழ்விடங்கள், இல்லாமல் அலைந்துதிரிகின்றன. பஞ்சவர்ணக் குருவிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாரைக்கொக்குகள்,புறாக்கள்,மயில்கள் எனப் பல்வகையானபறவைவர்க்கங்களும் அருகிச் செல்கின்றன. இதே போன்றுயானைகள்,மான்கள்,மரைகள்,பன்றிகள் போன்றமிருகவர்த்தகங்களும் அருகிச் செல்கின்றன. இதுமட்டுமன்றிமனிதனின் வாழ்விடங்களைநோக்கிபாதுகாப்புக்காக
படையெடுக்கின்றன. இவ்வாறானநிகழ்வுகள் நடைபெறுகின்றன.

காட்டுத்தீ,வெள்ளப்பெருக்கு,மண்சரிவு,மண்அரிப்பு, சூறாவளி போன்றபல்வேறு இயற்கைநிகழ்வுகளால் மண்வளம் குறைகிறது. பயிர் விளைச்சல் குறைவடைகிறது. உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவறுமைதாண்டவம் ஆடுகிறது.

அத்துடன் கடலில் முருகைக் கற்பாறையில் வாழும் அலங்காரமீனினங்கள் Colour Fish's மிகவும் பெறுமதிமிக்கஏற்றுமதியாகஉள்ளன. மனிதநடவடிக்கைகளின் காரணமாககரையோர சூழல் பாதிப்புகரையோரத்தில் கொட்டப்படும் குப்பை கூழங்களும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக் கழிவுப் பொருட்களும் கடலிலசேர்வதால் கடல்நீர் மாசடைகிறது. இதுமட்டுமன்றிகடலில் எண்ணெய் கப்பல்,எரிவாயுக்கப்பல் மூலம் நீரில் கலக்கப்படும் நச்சுக்களால் கடல்சூழல் மாசடைந்துஉயிர் பல்வகைமையானதுபாதிப்படைகிறது. அண்மையில் சீனாவிலிருந்துகொழும்புக்குவந்தஎண்ணெய் கப்பலின் கசிவினால் கடலாமைகள் மீனினங்கள் இறந்துகிடந்தன.

சூழல் பாதுகாப்புகடலோரப் பாதுகாப்புஅதிகாரசபைகடற்கரை கடல் நீரைச் சுத்தமாகவைத்திருக்கவேண்டியதன் நோக்கில் கடற்கரைஅசுத்தமடைவதைதடுப்பதற்கும் கடல் அரிப்பைதடுப்பதற்கும் நடவடிக்கைஎடுத்துவருகிறது.

கடலரிப்பைத் தடுக்கும் நோக்கில் கற்பாறைகள் அணைகட்டுதல் மரங்கள் நடுதல் மூலம் கடல் அரிப்பைதடுக்கும் நடவடிக்கைகளைமேற்கொள்ளுகின்றன. கடலில் அமிலத்தின் செறிவுஅதிகரிப்பதனால் (Ocean Acititication) செயற்பாட்டினால் மீன்களின், இறால்களின்,நண்டுகளின் ஓடுகள் வன்கூடுகள் கரைந்து இவைகள் இறக்கின்றன. அத்துடன் முருகைக் கற்களும் உடைந்துஅதில் வாழும் சிற்றுபயிர்களும் அழிவடைவதனால் மீன்களும் உணவுகிடைப்பதில்லை. இயற்கைசமநிலைபாதிக்கப்படுகிறது. இதுவும் உயிர் வாழ் பல்வகைப் பாதிப்படைவதற்குகாரணியாகஉள்ளதுஎனலாம்.

மனிதநடவடிக்கைகளினால் இந்தஅரியவகைகண்டல் தாவரங்கள் பலஅழிக்கப்படுவதனால் பலநீரேற்றுப் பிரதேசநிலங்கள் மண்ணரிப்புக்குஉட்டுபவதனால் இத்தாவரங்களும் அழிந்துஉயிர்பல்வகைமையானதுமிகவும் பாதிக்கப்படுகின்றது. எனவேமீள்நடுகைஅல்லதுகாடுகளைபாதுகாத்தல் செயல் திட்டத்தின் மூலம் மரம் நடுகைசெய்யப்படுவதன் மூலம் இஇந்தகுறைபாடுகளைதீர்க்கமுடியும் என்பதையும் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. சேதனப்பசளைஉற்பத்தியும் நஞ்சற்றகிருமிநாசினிப் பாவனையும் விவசாயத்துறையில் சிறந்தவிளைவையும் நச்சற்றஉணவுகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெற்றுக்கொள்ளமுடியும். நிலத்தடிநீர் விவசாயத்தில் 70%ஆகஉள்ளதுஎனஆய்வில் மேற்கொள்ளப்பட்டது.

மனிதனின் நல்வாழ்வுக்கு சூழலே முதற்காரணம் இயற்கைவளம் அழிப்புகாடுகள் வெட்டப்படுவதால் மண்சரிவுஏற்படல் செயற்கைஉரப்பயன்பாடுமண்வளம் பாதிக்கப்படுகிறது. இதனால் வளிமண்டலம் மாசடைகிறது. ஒவ்வொருமனிதனும் தம் தம் கடமைகளைஅறிந்துசெயற்பட்டால் சூழல் சுத்தம் பேணப்படும். சுத்தம் சுகம் தரும் நோயற்றவாழ்வேகுறைவற்றசெல்வம் என்றுஆன்றோர் கூறியுள்ளனர்.

இந்தியப் பெருங்கடலின் பொக்கிஷம் பாரதநாடும் இந்தியாவும் இந்துசமுகத்திரத்தின் முத்துஎனவர்ணிக்கப்படும்ட இலங்கைத் திருநாட்டின் இயற்கைவளங்கள் அதிகம் காணப்படுகின்றன. கடல்வாழ் உயிரினங்கள்,முத்துக்கள்,சிப்பிகள்,பவளப்பாறைகள்,மீனினங்கள்,சங்குகள், இறால்கள்,நண்டுகள், கடல் அட்டைகள்,கடலாமைகள் என்பனமக்களின் அன்றாடதேவைகளுக்கும் மற்றும் ஏற்றுமதிபொருட்களுக்கான சந்தைவாய்ப்பைஏற்படுத்தியஅந்நியச் செலவணியைப் பெற்றுத் தருகின்றன.

இயற்கைகாலநிலைமாற்றத்தின் காரணமாகபறவையினங்கள் இந்தியா,மலேசியா,சீனா,மாலைதீவு,பாகிஸ்தான்,அவுஸ்ரேலியாபோன்றநாடுகளில் இருந்துபருவகாலமாற்றத்தினால் குளிர்காலங்களில் இலங்கைக் காடுகள் மற்றும் நீர்நிலைகள் உள்ளசதுப்புநிலங்களில் வந்துதங்கிவாழ்கின்றன. குறிப்பாகவடக்குகிழக்குக் கரையோரம் மத்தியமலைநாடுகளைநோக்கிச் செல்கின்றன.

இயற்கையானமானிடகாரணிகளின் விளைவால் நிலவளம் குறைவடைகிறது. அந்தவகையில் நாடுபல்வகைகளைநிலச்சீர் குலைவுக்குமுகங்கொடுத்துள்ளது. இயற்கைக் காரணிகளானநிலச்சரிவு,காற்று, கடல் அலை,பூகம்பம் (நிலநடுக்கம்),சுனாமி (கடல்அதிர்வு),காடழிப்பு,காட்டுத்தீ,எரிமலைகுமுறல்,பணிமலைஉருகுதல் போன்றபல்வேறுகாரணிகளால் இயற்கைஅனர்த்தங்கள் ஏற்படுகின்றன.

இந்துசமுத்திரத்தின் வங்கக்கடலில் ஏற்படும் காலநிலைமாற்றம்,வளிமண்டலதாழ் அமுக்கம்,புயற்காற்று, சூறாவளி அடிக்கடிஉருவாகிறது. இத்தாழ் அமுக்கம் ஏற்பட்டுள்ளதற்கானதகவல்களைசென்னைவானிலைஆய்வுமையம் முன்கூட்டியேஅறிவிக்கிறது. பூகோளரீதியாக இலங்கை இந்தியாவின் தமிழககரையோரப் பகுதியானசென்னை இராமேஸ்வரம் மற்றும் மன்னார் வளைகுடாப் பகுதிவடக்குக் கிழக்குபகுதிகளின் வெள்ளம், சூறாவளி பற்றியதகவல்களைவழங்குகிறது. இதேபோன்று இலங்கைவானிலைஅவதானநிலையம் தகவல் வழங்குகிறது.

இந்தியாவில் யமுனை,கங்கை,காவேரி,தாமரபரணி,நதிகள் கடும் மழையின் காரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெருக்கெடுத்துமக்களின் வீடுகளுக்குள் செல்கிறது. இதுவீட்டுச்சுற்று சூழலை பாதித்துநீர் மாசடையச்செய்கிறது.

இதற்குஒழுங்கானதிட்டமிடப்படாதவடிகாணமைப்பேகாரணமாகஉள்ளன. அண்மைக்காலத்தில் பாகிஸ்தான் இந்தியாவின் தமிழகம் சென்னைமாநகரில் ஏற்பட்டபெரும் வெள்ளப் பெருக்கால் வீடுகள்,கடைகள்,வாகனங்கள் எனபலசொத்துக்களுக்குபாரிய இழப்பு ஏற்பட்டது. இவ்வாறானநிகழ்வுக்குகாரணமும் திட்டமிடப்படாதவீதியோரவடிகால் அமைப்பு இல்லாமையால் தண்ணீர் வடிந்தோடமுடியாதநிலைஏற்பட்டதனால் விவசாயப் பயிர்கள் அழிந்ததுமட்டுமன்றிநோயினால் மக்கள் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர்.

சூழலை நேசிப்போம் சூழலை பாதுகாப்போம் என்றசெயல் திட்டத்தின் கீழ் ஜூன் மாதம் 5ந் திகதிஉலகசுற்றாடல் தினம் நாடளாவியரீதியிலும் சர்வதேசரீதியிலும் கொண்டாடப்பட்டுவருகிறது. உலகசுற்றாடல் தினம் சர்வதேசஅமைப்புக்களாலும் கொண்டாடப்படுகிறது. செப்ரெம்பர் 16ல் சர்வதேசஓசோன் தினம் ஜனவரி 22ல் உலகநீர் தினம் சர்வதேசஅமைப்பினால் கொண்டாடப்படுகிறது. "சூழல் நம்மைகாக்கும் நாம் சூழலைக் காப்போம்"என்றதொனிப்பொருளில் சுற்றுச்சூழல் பாதுகாப்புமேற்கொள்ளப்படுகிறது. பூமிஅரிப்பையும் செய்துகொண்டிருக்கிறது.

காலநிலைமாநாடுCOP 27 இல் முன்வைக்கப்பட்டது.

பசுமை இல்லாவாயுக்களைஎவ்வாறுகுறைப்பது. காலநிலைமாற்றம் வெள்ளம்,வறட்சி,சூறாவளி,நிலச்சரிவு,காட்டுத்தீபோன்றபேரழிவுகள் அனைத்தும் அடிக்கடிநிகழ்வுதீவிரமடைந்துவருகிறது. பாரிஸ் 7 ஆண்டுக்குமுன் காலநிலைமாற்றதாக்கம் ஏற்பட்டது. பாதகமானவிளைவுகள் தொடர்புடைய இழப்புக்கள் மற்றும் சேதங்கள் தவிர்ப்பதுகுறையாது. நிவர்த்திசெய்யமுடியும்.

2025ம் ஆண்டில் உலகசனத்தொகைப் பெருக்கம் 800 கோடிகள் தாண்டும் நிலையில் பொருளாதாரம் சுகாதாரப் பிரச்சினைகளால் உலகநாடுகள் மேலும் மோசமானநிலையையேற்படுத்தும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகள் மற்றும் சேதனப்பசளைமுறையிலானவிவசாயமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. மேலும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிப் போக்கும் இயற்கைநிகழ்வுகளின் தாக்கங்களால் பாதிக்கப்படுகின்றன.

எதிர்காலசந்ததியினர் சுத்தமானகுடிநீர்,சுத்தமான சூழல்,சுத்தமானகடற்கரைப்பிரதேசம்,சுத்தமானநாட்டைக் கட்டியெழுப்பஅனைவரும் ஒத்துழைப்போம்.

பச்சைவீட்டுத் தாக்கத்திலிருந்து (Green House) எம்மைபாதுகாப்போம்.

**தொகுப்பு**

**திரு.சீ.தரணீஸ்வரானந்தா**
**ஓய்வுநிலைஅதிபர் (JP)**
**பெரியஊறணி,**
**மட்டுநகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு மாநகர சபை பொது நூலகங்களின் சேவை மதிப்பீடு

திருமதி.றமா ராசலிங்கம்
நூலகப்பரிசாரகர் பொது நூலகம் பாரதிலேன் மாநகர சபை, மட்டக்களப்பு

செல்வி.த.சிவராணி
நூலகர் பொது நூலகம் மாநகர சபை மட்டக்களப்பு

திரு.செ.சாந்தருபன்
பிரதி நூலகர், கிழக்குப்பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

நூலக செயற்பாடுகளை சிறப்புற முன்னெடுத்துச் செல்வதற்கு நூலகத்தின் முக்கிய பங்காளிகளான வாசகர்களின் பின்னூட்டம் மிகவும் அவசியமாகும். இவ்வாறான பின்னூட்டங்கள் நூலகத்தின் செயற்பாடுகளை மதிப்பிடவும் அவற்றினை மேலும் வளப்படுத்தவும் உதவும். இந்த வகையில் மட்டக்களப்பு மாநகர சபை பொது நூலக வாசகர்களின் பின்னூட்டங்களின் மூலம் பொதுநூலகங்களின் சேவை மதிப்பீட்டினை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் ஒரு பிரதான பொது நூலகமும் அதன் எட்டு கிளை பொது நூலகங்களும் உள்ளன. பொது நூலக வாசகர்களிடையே எழுமாற்று மாதிரி எடுப்பு முறையின் மூலம் 101 நூலகப்பயனாளர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு பொது நூலகங்களின் செயற்பாடுகள் பற்றிய அவர்களது பின்னூட்டங்கள் பெறப்பட்டன. வினாக்கொத்துக்கள் மூலம் வாசகர்கள் நூலகத்தை பாவிக்கும் நோக்கம், பாவிக்க விரும்பும் நேரம்,நூலகத்தின் சிறப்பம்சங்கள், நூலகத்தில் முன்னேற்ற வேண்டிய தேவைகள் பற்றி வினாக்கள் அமைந்திருந்தன. வினாக்கொத்துகள் அளவறி முறையிலும் பண்பறிமுறையிலும் பின்னர் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நூலகத்தின் சிறப்பம்சங்களும், நூலகத்தில் முன்னேற்ற வேண்டிய தேவைகளும் நூலக சேகரிப்பு, பௌதீக வளம், மனித வளமும் முகாமைத்துவமும் என்னும் தலைப்பின் கீழ் ஆராயப்பட்டது.

பண்பறி பகுப்பின் முடிவுகளாக போதுமான சேகரிப்புகள், சேகரிப்புகளின் சிறப்பான ஒழுங்குபடுத்தல் அரிதான ஆவணங்கள் காணப்படுகின்றமை என்பன நூலக சேகரிப்பு பற்றிய சிறப்பம்சமாக வாசகர்களால் குறிப்பிடப்பட்டிருந்தது. பௌதீக வளம் தொடர்பில் அமைதியான, துப்பரவான காற்றோட்டமுள்ள மின் விசிறிகள், மின்விளக்குகள் கொண்ட இடமாகக் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டது. மனித வளம் தொடர்பாக நூலக ஊழியர்கள் ஒத்துழைப்பு வரவேற்கும் தன்மை வாசகர்களுக்கு உதவி புரியும் தன்மை என்பன கூறப்பட்டன.

நூலகத்தை முன்னேற்ற வேண்டிய பகுதிகளில் மேலதிக புத்தகங்கள், குறிப்பாக புதிய பாடத்திட்டங்களுக்கான புத்தகங்கள், கதைப்புத்தகங்கள், சட்டமூலங்கள், மாதாந்தச் சஞ்சிகைகள்,ஈழத்து எழுத்தாளர்களது நூல்கள் என்பன அவசியமானவை என்பன குறிப்பிடப்பட்டன. புத்தகங்கள் இரவல் வழங்கும் காலத்தினையும், நூலகம் திறந்திருக்கும் நேரத்தினையும் அதிகரிக்குமாறும் கூறப்பட்டது. பௌதீக வளங்கள் தொடர்பாக போதிய அளவு மின்விசிறிகள் அமைக்கவேண்டும், தூய மற்றும் போதுமான அளவு மலசலகூட வசதி என்பன காணப்படவேண்டும், எண்ணிம தொழினுட்ப மற்றும் இணைய வசதி என்பன அமைந்திருக்க வேண்டும், இட வசதி அதிகரிக்கப்படவேண்டும், கவர்ச்சிகரமான நூலக கட்டிடம், போட்டோ பிரதி சேவை என்பன காணப்படவேண்டும், போதிய அளவான தளபாடங்கள் அவசியம் என்பன குறிப்பிடப்பட்டன. வாசகர்கள் நூலகங்கள் பற்றி வழங்கிய ஒட்டுமொத்த மதிப்பீடானது 20 வீதம் திருப்தி, 60 வீதம் நன்று, 20 வீதம் மிக நன்று என்று காணப்பட்டது. இத்தகைய வாசகர் பின்னூட்டங்களின் அடிப்படையில் நூலக சேவைகளும் அவற்றின் வளர்ச்சியும் திட்டமிடப்படவேண்டும். வாசகர்கள் குறிப்பிட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்போது நூலகம் பற்றிய மதிப்பீடு மேலும் உயர்வடையும். பொது நூலகங்களின் தாய் நிறுவனங்கள் நூலகம் தொடர்பான திட்டமிடலின் போது இத்தகைய வாசகர் பின்னூட்டங்களைக் கருத்தில் கொள்வது நன்றென ஆய்வாளர்களால் பரிந்துரைக்கப்படுகிறது. திறவுச்சொற்கள்: பின்னூட்டங்கள்,நூலகப்பயனாளர்கள், பொது நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

*"Libraries and Societies Connect: Strengthening the Bonds Through Community Outreach"*

**National Conference on Library & Information Science (NACLIS) - 2024**
**Session - 1**

# மட்டக்களப்பு மாநகர சபை பொது நூலகங்களின் சேவை மதிப்பீடு பற்றிய ஆய்வு

றமா ராசலிங்கம், பொது நூலகம், மட்டக்களப்பு
த.சிவராணி, பொது நூலகம், மட்டக்களப்பு
செ.சாந்தருபன், கிழக்குப் பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உள்ளடக்கம்

- அறிமுகம்
- நோக்கம்
- ஆய்வு முறையியல்
- பகுப்பாய்வு
- ஆய்வின் முடிவு
- பரிந்துரைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அறிமுகம்


- நூலகச் செயற்பாடுகள் வாசகர்களின் பின்னூட்டங்களைக் கொண்டு மதிப்பிடவேண்டியது நூலகத்தின் கடைமையாகும்
- இத்தகைய பின்னூட்டமானது நூலகத்தினையும் அதன் சேவைகளையும் வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்வதற்குரிய ஆலோசனைகளை வழங்கும்.
- நூலகங்களின் தாய்நிறுவனத்திடம் இருந்து நூலகத்தின் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளைப் பெறுவதற்கும் இத்தகைய பின்னூட்டங்கள் பெரிதும் உதவிபுரியக் கூடியன.
- இவ்வாய்வானது மட்டக்களப்பு பொது நூலக வாசகர்களின் பின்னூட்டங்கள் பற்றி ஆராய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அறிமுகம்

- மட்டக்களப்பு பொது நூலகம் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு நூலகமாகும் (1885 ஆண்டு நிறுவப்பட்டது)
- இதன் கீழ் 12 கிளை நூலகங்கள் உள்ளன.
- மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட 90,000 மக்களே இதன் பிரதான வாசகர்களாகும்.
- இந் நூலகம் சுமார் 13,000 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நோக்கம்

இந்த ஆய்வின் நோக்கமானது மட்டக்களப்பு பொது நூலக வாசகர்களின் பின்னூட்டங்களைக் கொண்டு நூலக சேவையினை மதிப்பீடு செய்தலாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஆய்வு முறையியல்


- இது ஒரு குறுக்குவெட்டு ஆய்வாகும்
- பிரதான பொது நூலகத்தினதும் தெரிவு செய்யப்பட்ட ஏழு கிளை நூலகங்களும் இவ்வாய்வின் பிரதேசமாகும்
- இந்நூலகங்களுக்கு வருகின்ற எழுமாற்று முறையில் தெரிவு செய்யப்பட்ட 101 வாசகர்களுக்கு நூலகப் பின்னூட்டல் படிவமானது வினாக்கொத்து வடிவில் வழங்கப்பட்டது.
- அளவறி, பண்பறி முறையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பகுப்பாய்வில் கண்டறியப்பட்டவை

## நூலக வாசகர்களின் தன்மை




வாசகர்களின் தொழில்





நூலகத்திற்குச் செல்லும் காலம்







Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media




நூலகத்தைப் பாவிக்கும் நோக்கம்




நூலகத்தை பாவிக்க விரும்பும் நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நூலக வாசகர்களின் தேவைகள்

பண்பறி பகுப்பின் மூலம் பெற்ற தரவுகள் எண்ணிடப்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| புதிய புத்தகம் (கதைப் புத்தகம், பாடப்புத்தகம்) | 73.8% |
| வர்த்தமானி | 4.8% |
| நூலகம் திறக்கும் நேரம் நீட்டித்தல் | 4.8% |
| தூர இட மாணவர்களுக்கு இரவல் வழங்கல் | 4.8% |
| பாடசாலை மாணவர்களுக்கு புத்தக இரவல் | 2.4% |
| மாதாந்த சஞ்சிகை | 2.4% |
| இரவல்காலம் நீட்டித்தல் | 2.4% |
| சிறுவர் வாசிப்புப் பகுதி | 2.4% |
| போட்டோ பிரதி | 2.4% |

தகவல் வளங்களும் சேவைகளும்

| | |
|---|---|
| தளபாடம் | 29.4% |
| புதிய தொழினுட்பம் Internet, Computer, WiFi, Digital | 29.4% |
| மலசலகூட வசதி | 11.8% |
| குளிரூட்டிய அறை | 11.8% |
| வாகனம் நிறுத்துமிடம் | 5.9% |
| அதிக இட வசதி | 5.9% |
| ஈழத்து எழுத்தாளர் நூல்கள் | 2.9% |
| தளபாடங்களுக்கிடையே அதிக இடைவெளி | 2.9% |

பௌதீக வளங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களின் பார்வையில் நூலகத்தின் குறைபாடுகள்

| | |
|---|---|
| நூல்கள் குறைவு, புதிய பாடத்திட்ட நூல்கள் இல்லை, கதைப்புத்தகம் இல்லை | 24.1% |
| செய்தித் தாள் போதாமை | 3.4% |
| நூலகம் திறக்கும் நேரம் போதாமை | 1.7% |
| புத்தகங்களைத் தேடுவது சிரமம் | 1.7% |
| ஆங்கிலப் புத்தகம் அதிகம் உள்ளன. | 1.7% |

தகவல் வளங்களும் சேவைகளும்

| | |
|---|---|
| இடவசதி இல்லை | 19.0% |
| மலசல கூடம் ஒழுங்கில்லை | 17.2% |
| கணினி, தொழினுட்ப வசதியின்மை | 10.3% |
| நூலகத்திற்கு வர்ணம் பூசவில்லை | 6.9% |
| அமைதியற்ற சூழல் | 5.2% |
| தளபாடம் இன்மை | 3.4% |
| மின்விசிறி இல்லை | 1.7% |
| ஜன்னல் உடைவு, | 1.7% |
| அதிக வெப்பம் | 1.7% |

பௌதீக வளங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசகர்களின் பார்வையில் நூலகத்தின் சிறப்பம்சங்கள்

| | |
|---|---|
| புத்தகங்கள் நேர்த்தியாக அடுக்கப்பட்டுள்ளன | 14.3% |
| போதுமான புத்தகம், நல்ல புத்தகம் | 12.5% |
| செய்தித் தாள்கள் ஒழுங்கு சிறப்பு | 8.0% |
| தினமும் செய்தித் தாள்கள் கிடைத்தல் | 4.5% |
| சேவை பெறுவதில் இலகுத் தன்மை | 3.6% |
| அரிதான புத்தகங்கள், பழைய ஆவணங்கள் | 1.8% |
| மும்மொழயிலும் செய்தித் தாள்கள் | 1.8% |
| சிறுவர் நூலகப் பகுதி | 0.9% |

தகவல் வளங்களும் சேவைகளும்


| | |
|---|---|
| அமைதி | 14.3% |
| சிறந்த ஊழியர்கள், ஊழியர் ஒத்துழைப்பு, கனிவான ஊழியர்கள் | 8.9% |
| சிறந்த நிர்வாகம் | 7.1% |
| தூய்மை | 5.4% |
| காற்றாடி, மின்விளக்கு வசதி | 3.6% |
| சேவை பெறுவதில் இலகுத் தன்மை | 3.6% |
| சிறந்த பராமரிப்பு | 2.7% |
| வாசிப்பு மாதச் செயற்பாடு சிறப்பு | 2.7% |
| காற்றோட்டம் | 1.8% |
| நூலகம் அழகாக உள்ளது, தோட்டவேலை சிறப்பு | 1.8% |
| சிறுவர் நூலகப் பகுதி | 0.9% |
| இடவசதி | 0.9% |

பௌதீகச் சூழலும் ஊழியர் ஒத்துழைப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலக சேவை பற்றி வாசகர்களின் சராசரி மதிப்பீடு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆய்வு முடிவுகள்

- மட்டக்களப்பு பொது நூலக சேவை மதிப்பீடுகள் பெரும்பாலும் நன்று நிலையில் உள்ளன.
- எனினும் வாசகர்கள் குறைபாடுகளையும், தேவைகளையும் சுட்டிக் காட்டியுள்ளனர்
- அவை பூர்த்தி செய்யப்படும்போது நூலகம் பற்றிய வாசகர்களின் மதிப்பீடு உயர்வடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பரிந்துரைகள்

- பொது நூலகங்கள் வாசகர் பின்னூட்டங்களை குறித்த கால அளவில் பெற்றுக் கொள்ளவேண்டும்
- அதன் முடிவுகளைக் கொண்டு தங்களது வருடாந்தச் செயற்பாடுகளைத் திட்டமிட வேண்டும்
- பொது நூலகங்களின் தாய் நிறுவனங்கள் நூலகம் தொடர்பான திட்டமிடலின் போது இத்தகைய வாசகர் பின்னூட்டங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மிக்க நன்றிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாதாதை காட்சிபடுத்தல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தபட்ட பேச்சுப் போட்டி











Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சிறைச்சாலை கைதிகளுக்கு
வாசிப்பு சம்மந்தமான விழிப்புணர்வு.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media